கொ 2008

ISSN 1391-9504

July + Aug + Sep + O - July - DEC

Price Rs. 20.00
(With Transport cost)
விலை ரூ: 20.00
(போக்குவரத்து செலவுடன்) விஜய Vijey

Vijey විජය

# விஜய்

16.07.2008 - மலர் 05, இதழ் 19

## விடைபெறப்போகும் கனிய எண்ணெய்




## பணத்தின் பாவனை

## உயிரியலின் தந்தை

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் 'தனபாத்தா' பண்டிகை





ஜப்பானில் ஒரு பாரம்பரிய நிகழ்வாக 'தனபாத்தா' என்னும் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

வருடாந்தம் ஜூலை மாதம் 7 ஆம் திகதியன்று இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்தப் பண்டிகையின்போது மக்கள் தமது விருப்பங்கள், வேண்டுகோள்களை வண்ணத் தாள்களில் எழுதி மூங்கில் கிளைகளில் மாட்டி விடுகின்றனர். அத்துடன் மூங்கில் கிளைகளை அவர்கள் பல்வேறு வண்ணங்களில் அலங்கரித்து தமது இல்லங்களுக்கு வெளியில் வைக்கின்றனர். நகரங்கள் பட்டினங்களில் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு 'தனபாத்தா' பண்டிகை கொண்டாடப்படுவதோடு பல்வேறு கேளிக்கை நிகழ்ச்சிகள் விளையாட்டுக்கள் என்பனவும் இடம் பெறுகின்றன.

சில பிராந்தியங்களில் மக்கள் விளக்குக் கூடுகளையும் மூங்கில் இலைகளையும் ஆறுகளில் மிதக்க விடுகின்றனர். விவசாயிகள், மீனவர்கள் உட்பட மக்களுக்கு செல்வம் பெருகும் என்னும் நம்பிக்கையில் பல்வேறு செயல்பாடுகளை இவர்கள் பாரம்பரியமாக செய்து வருகின்றனர். 'தனபாத்தா' பண்டிகை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பாரம்பரிய சீனக்கதை ஒன்றும் நினைவு கூரப்பட்டு வருகிறது.

ஒரு காலத்தில் நெசவு செய்யும் ஒரிஹிமி என்னும் இளவரசி ஒருத்தியும் மாடு மேய்க்கும் ஹிக் கோபோஷி என்னும் இளவரசனும் இருந்தனர். இவர்கள் இருவரும் சேர்ந்து தமது கடமைகளை மறந்து விளையாடுவதிலேயே ஈடுபட்டு இருப்பார்கள்.

இதனால், அரசன் கோபங் கொண்டு இவர்கள் இருவரையும்



'அமனோகாவா' என்னும் ஆற்றுக்குப் பக்கத்தில் எதிரும் புதிருமாகப் பிரித்து வைத்து விட்டான். அரசன் இவர்களை வருடத்தில் ஒருமுறை மட்டும் அதாவது ஜூலை மாதம் 7ஆம் திகதி மட்டுமே சந்தித்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கி இருந்தான். இவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்வதையொட்டிய இந்த நாள் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஜூலை 7 ஆம் திகதி மழைநாளாக இருந்தால் இவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்ள முடியாது என்று நம்பும் மக்கள் இந்த நாளில் சிறந்த காலநிலை நிலவ வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர். 'தனபாத்தா' பண்டிகை நாளன்று வீதிகள் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும் கண் கொள்ளாக்காட்சி உல்லாசப் பயணிகளை கவர்ந்து இழுப்பதாக இருக்கின்றது.

—ராஜா


## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
தொ.பே.இல: ..........................................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.


............................ ............................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653

# பயன்படாத கப்பல்கள்

கப்பல்கள் பழையதாகி பயன்படாமல் போகும்போது அவற்றை என்ன செய்கிறார்கள் தெரியுமா? உடைத்து அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து எடுத்துவிடுவார்கள். உலகில் இப்படி உடைக்கப்படும் கப்பல்களில் அரைவாசிப் பகுதி இந்தியாவில்தான் உடைக்கப்படுகின்றனவாம். குஜராத் மாநிலத்தில் உள்ள சிறிய கடற்கரையோர நகரமான 'அலாங்'கில்தான் இந்த கப்பல் உடைக்கும் தொழில் மும்முரமாக நடைபெறுகின்றது. கடலில் அலைகள் உயரமாக மோதும் வேளையில் இந்தக் கப்பல்கள் கரைக்குக் கொண்டு வரப்படுகின்றன.



அலைகள் குறையும் போது கப்பல்கள் ஆழம் குறைந்த பகுதிகளிலேயே தங்கி விடுகின்றன. பின்னர் அவை கரைக்கு இழுத்து வரப்படுகின்றன.


அதன் பின்னர் கப்பல் உடைப்பதில் பயிற்சி பெற்றவர்கள் கப்பலை உடைக்கத் தொடங்குகின்றனர். கப்பலில் இருக்கும் பயன்படுத்தக்கூடிய பொருட்களான மேசை, நாற்காலி, சமையலறைப் பொருட்கள், குளியலறைப் பொருட்கள், இயந்திரங்கள் போன்றவற்றை முதலில் அப்புறப்படுத்துகின்றனர். பழைய பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளில் இவை விற்கப்படுகின்றன.



உபயோகமான பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டதும் கப்பலை உடைக்கும் பணி தொடங்குகிறது. கப்பலை உடைக்கும் பணியும் மிகவும் அபாயகரமானதுதான்.

உலோகங்களை துண்டிக்கும் கருவிகள் மூலம் கப்பல் பாகங்கள் துண்டிக்கப்படும்போது ஆபத்துகளும் ஏற்படுவதுண்டு. அத்துடன், கப்பல் கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் 'அஸ்பெஸ்டாஸ்' என்ற நச்சுத் தன்மை வாய்ந்த வேதிப் பொருள்களும் கப்பல் உடைப்பவர்களுக்கு தீங்கை ஏற்படுத்துகின்றன. இதனால், அவர்களின் நுரையீரல் பாதிக்கப்படும் அபாயமும் உண்டு.





கப்பல் உடைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடும் தொழிலாளர்கள் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சில கப்பல்களில் காணப்படும் கதிரியக்கப் பொருட்களும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட துருவத்தில் உருகும் பனிப்பாறைகள்



வட துருவத்தில் அமைந்துள்ள 'ஆர்ட்டிக்' சமுத்திரமானது பனிப்பாறைகள் நிறைந்த கடற்பரப்பாகும். இந்தக் கடற்பரப்பில் கப்பலில் பயணிப்பது மிகவும் சிரமமானதொரு காரியமே.

இந்தப் பனிப்பாறைகள் உருகுவதனால் சமுத்திரத்தின் நீர்மட்டம் வர வர உயர்ந்து செல்கின்றதாம்.

பனிப்பாறைகள் உருகுவதற்கான பிரதான காரணம், புவி வெப்பம் அதிகரித்துச் செல்கின்றமையாகும். முறைகேடான மனித செயற்பாடுகளின் உச்சக்கட்டம் இதுவென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஏனெனில், ஆர்ட்டிக் சமுத்திரப்பரப்பானது பாரிய பனிப்பாறைகளுடன் கூடிய பிரதேசம். இங்குள்ள பனிப்பாறைகள் உருகத் தொடங்கினால் கடல் நீர்மட்டம் உயர்ந்து சென்று பல தீவுகள் நீரில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




வட துருவத்தில் நிலப்பரப்புகள் இல்லை. அதற்கு முற்றிலும் மாற்றமாக விசாலமான பனி மலைகளையும் பனிப்பாறைகளையுமே வருடம் முழுவதும் அங்கு காணக்கூடியதாக இருந்தன. வருடா வருடம் அங்குள்ள பனிப்பாறைகள் உருகும் நிலையைக் கண்காணித்து வந்த விஞ்ஞானிகள், இந்த வருடத்தில் முன்னரிலும் பார்க்க மிக வேகமாக பனிப்பாறைகள் உருகி வருவதை அவதானித்துள்ளனர்.



எனினும், இந்த வருடத்தில் 'ஆர்ட்டிக்' சமுத்திரத்தில் கப்பலில் பயணம் மேற்கொள்வது சாத்தியமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இது மகிழ்ச்சிக்குரிய விடயமல்ல என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

'ஆர்ட்டிக்' சமுத்திரத்தினூடாக கப்பல்கள் பயணிக்கலாம் என்பதானது அங்குள்ள பனிப்பாறைகள் உருகுவதை எமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



# 850 ஆவது வருட நிறைவுக்கு கேக் வகைகள்

ஜேர்மனியின் மியூனிச் நகரின் 850 ஆவது வருட நிறைவு விழாவை முன்னிட்டு, கடந்த ஜூன் 15 ஆம் திகதியன்று கோலாகலமான வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தெற்கு ஜேர்மனியில் மியூனிச் நகரின் மெரியன் ஃப்ளெட்ஸ் சதுக்கத்திலேயே இந்த வைபவம் நடைபெற்றது. இதன்போது ஸ்ட்ரோபரி, வெனிலா மற்றும் சொகொலட் சுவைகளிலான 850 கேக் வகைகளை உள்ளடக்கிய விசாலமான கேக் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது.

# கிருமிநாசினிகளினால் மரணம் அதிகரிப்பு

விஷக் கிருமிகளினால் சம்பவிக்கும் மரணங்களில், கிருமிநாசினிகளினால் நிகழும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கிருமிநாசினிகள் தவறுதலாகவோ, உயிரை மாய்த்துக் கொள்ளும் நோக்கிலோ அல்லது வேறு வழிகளிலோ உடலுக்குள் செல்வதனால் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றவர்களில் பெண்களின் சதவீதமே அதிகளவில். இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றவர்களில் 5 சதவீதத்தினர் உடலுக்குள் நஞ்சு உட்செல்வதனாலேயே மரணத்தை தழுவுகின்றனர் என்றும் அண்மைய ஆய்வறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

இவ்வாறு உடலுக்குள் நச்சு உள்வாங்கப்படல் தொடர்பாக தேவையான அறிவுரைகளை வழங்க, தேசிய வைத்தியசாலையின் தேசிய நச்சு மற்றும் மருந்து தகவல் மத்திய நிலையமொன்று 24 மணிநேர சேவையை வழங்குவதற்கு நிறுவப்பட்டுள்ளதாக தேசிய நச்சு மற்றும் மருந்து தகவல் மத்திய நிலையத்தின் வைத்தியர் டி.ஆர்.டபிள்யூ. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# முத்திரைக் கண்காட்சியும் போட்டியும்

இலங்கை முத்திரை சேகரிப்பாளர்கள் சங்கம், தேசிய மட்டத்திலான முத்திரைக் கண்காட்சியொன்றையும் நாடளாவிய ரீதியிலான முத்திரைப் போட்டியொன்றையும் டிசம்பர் மாதம் 5,6 ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானித்துள்ளது. இதனை தேசிய கலாபவனத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போட்டி தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து விளக்கமளிப்பதற்கான கூட்டமொன்று ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கொழும்பு 10, பன்சிகாவத்தையிலுள்ள அபயசிங்ஹாராம விகாரையில் நடைபெறவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான கூட்டம் தொடர்பிலான விபரங்கள் பாடசாலை அதிபர்களூடாக



அறிவிக்கப்படும்.

இம்மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் மு.ப 8.00 மணியிலிருந்து 11.00 மணி வரை இலங்கை முத்திரை சேகரிப்பாளர்கள் சங்கத்தின் 2872351 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.



60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்

FREE FREE இலவசம் இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்

* இலவச 30 days Easy Way English Book Part1




இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுப்பாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணம் கொடுக்கல் - வாங்கலில் நுழைந்த விதம்

பணம் என்று கூறியவுடன் பலவித பெறுமதியான பணநோட்டுக்களும் சில்லறை நாணயங்களும் தான் நம் மனதில் முதலில் தோன்றும்.

இற்றைக்கு மூவாயிரம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில்தான் 'பணம்' பிறந்தது. அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் கொடுக்கல் வாங்கல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே பணம் உருவாகியது. நவீன உலகில் மிகவும் முன்னேற்றகரமான பல பணப் புழக்கமுறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

நவீன உலகில் பணப் பரிமாற்றம் வளர்ச்சியடைய பல்வேறு வங்கிகள் மூலம் நடைபெறும் சேவை மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. பணப்பரிமாற்றத்தில் இத்தகைய புதிய முகம் தோன்றுவதற்கு ஐரோப்பாவினதும் அதனைத் தொடர்ந்து அமெரிக்காவினதும் கலாசாரம் பரவியதுதான் காரணமாகும்.

## பணமாக பல்வேறு பொருட்கள்


தொழில்நுட்பம் வளர்ச்சி அடையாத அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் மத்தியில் மிகவும் இலகுவான ஆரம்பநிலையில் கையாளப்பட்ட பணப்பரிமாற்றமே காணப்பட்டது. புராதன சமூகத்தில் புழக்கத்தில் இருந்த கொடுக்கல் வாங்கலானது தமது உற்பத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பொருட்களையும் இயற்கைச் சூழலில் (எண்ணக்கூடிய) கணக்கிடக்கூடிய முறையில் பொருட்களில் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட முறையே நடைமுறையில் இருந்தது. இவற்றில் பெறுமதியான கனிப்பொருட்கள், தானியவகைகள், மிருகங்கள், பறவைகள் என்பன இருந்தன. இங்கு கொடுக்கல் வாங்கலானது இயல்பு நிலைப்படி இப்பொருட்களின் அளவு, பெறுமதி என்பனவற்றை நிர்ணயிப்பது அக்கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்பட்டோர் மாத்திரமே.

இற்றைக்கு ஏறக்குறைய 2800 வருடங்களுக்கு முன்பே புழக்கத்திற்கு வந்தவைதான் உலோகத்திலான நாணயங்களாகும். அன்றிலிருந்து இன்று வரை உலோக நாணயங்கள் தொடர்ந்து புழக்கத்தில் இருப்பதோடு உலகில் ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் இன்றுவரை தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. காசோலை வங்கிக் குறிப்பு (Bank Note) கடன் அட்டை (Credit Card) போன்ற பல நவீன பணப்பரிமாற்ற முறைகள் வந்தாலும் அவற்றுக்கு மத்தியில் உலோக சில்லறை நாணயங்கள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து பாவனையில் இருப்பது ஒரு விசேட அம்சமாகும்.

## கொடுக்கல் வாங்கலின் பெறுமதி

பொதுவாக கொடுக்கல் வாங்கல் என்பது இரண்டு பேருக்கிடையில் அல்லது இரு குழுக்களிடையே நடைபெறும் பரிமாற்றமாகும். திருமண பந்தம், பரிசு வழங்கல் போன்றவையும் கொடுக்கல் வாங்கல் என்றே கருதப்படுகின்றது. எனினும், பணம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கலை 'பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்' என்ற பிரத்தியேக பெயரிலேயே அழைக்கின்றோம். தற்பொழுது உலக பொருளாதார முறைகள் உலக மயமாக்கலுக்கு இலக்காகி இருப்பதால் பொருளாதார கொடுக்கல் வாங்கலில் அதிகமானோர் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொது இலட்சணங்கள் உள் வாங்கப்பட்டுள்ளன. உதாரணமாக அமெரிக்க டொலரை சர்வதேச பொது பண அலகாக உலகம் ஏற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை, ஐரோப்பிய வலயத்தில் 'யுரோ' நாணயத்தை அதிகமானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆரம்பத்தில் இருவருக்கிடையில் அல்லது சிறு குழுக்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார கொடுக்கல் வாங்கல் ஆனது காலப்போக்கில் சமூகத்தொடர்புகள் விரிவடைந்ததும் தொலைதூர பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல் வரை பரந்து விரிந்தது. அதன் பெறுபேறாக நாடுகளுக்கிடையே அதுவும் தொலைதூர நாட்டுக்கு நாடு வர்த்தக நடவடிக்கைகள் உருவாகின. இதன்படி எமக்கு தெளி





வாக சில விடயங்கள் புரிகின்றன. அதாவது தொழில்நுட்ப வளர்ச்சி மாத்திரமல்ல; பொருளாதாரக் கொடுக்கல் வாங்கலின் இயல்பு நிலையும் அதன் வளர்ச்சியும் பணப்பரிமாற்றத்தின் முன்னேற்றத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என்பது உறுதி.

இக்காரணங்கள் அனைத்தையும் கவனத்தில் கொண்டு பணத்தின் வரலாற்றை ஆய்வு செய்யும் நோக்கில் பல படிமுறைகளாக நிபுணர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த ஆய்வில் பொருளாதார நிபுணர்கள், மனித வள நிபுணர்கள், தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்று ஆய்வாளர்கள் அடங்குவர்.

## ஆரம்ப யுகத்தில் பணப்புழக்கம்

பணம் உருவான ஆரம்ப யுகம் முதல் இன்று வரை அதன் வர்த்தகப் பெறுமதி மாத்திரமல்ல, மேலும் பல முக்கிய விடயங்கள் பணம் மூலமாக உருவாகின. சகல நாணயங்களும் அதனை உற்பத்தி செய்த மற்றும் புழக்கத்தில் ஈடுபட்ட சமூகத்தின் பண்புகள், பழக்கவழக்கங்கள், மரபுகள் கருத்துக்கள் போன்ற பல்வேறு விடயங்களை அடையாளம் காணும் சாதனமாக விளங்கியது ஒரு முக்கிய விடயமாகும். இதனால்தான் ஒவ்வொரு நாட்டு தொல்பொருள் ஆய்வாளர்களும் புராதன நாணயங்கள் பற்றி மிகுந்த அக்கறையுடன் தேடிக்கண்டுபிடித்தனர் என்பதும் இன்றும் தேடி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பணமானது செல்வத்தை அளவிடும், செல்வத்தைக் குறிக்கும் பிரதான மூலமாக மாறியமையால் பல்வேறு சமூக நடவடிக்கைகளின் போது பண பலம் முக்கிய காரணியாக அமைந்தது.

பொருளாதாரக் கொடுக்கல் வாங்கலின் அடிப்படையான இரு விடயங்கள் தவிர ஏனைய அதிகமான சந்தர்ப்பங்களில் மனிதனுக்கு பணம் இல்லாமல் வாழவே முடியாத நிலை ஏற்பட்டது. மேற்குறித்த காரணங்களால் தான் அன்று முதல் இன்று வரை பணமானது சௌபாக்கியத்தின் அதாவது சுபீட்சத்தின் அடையாளமாக கருதப்படுகின்றது.

## உலோக நாணயங்களின் ஆரம்பம்

மிக நீண்ட வரலாற்றைக் கொண்டதும் அதிக பிரசித்தி பெற்றதுமான உலோக நாணயமுறையின் தோற்றம் மெசபெத்தேமியா மற்றும் எகிப்திய நாகரிகப் பிரதேசத்திலிருந்தே தோன்றியது.

கி.மு 3000 ஆம் ஆண்டளவில்தான் நாணயமுறை நடைமுறைக்கு வந்தது. அவர்கள் பணம் உருவாவதற்கு முன் ஆரம்ப உலோகப் பொருளாக தங்கத்தையும் வெள்ளியையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நிறை அலகு முறையையே கைக்கொண்டனர்.

இவற்றின் பெறுமதியானது அதன் வெளித்தோற்றத்தைக் கொண்டு நிர்ணயிப்பதில்லை. மாறாக அதன் நிறை மற்றும் தொகை அளவைக் கொண்டே நிர்ணயிக்கப்பட்டது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் உங்கள் பெயர்!

எதிர்வரும் 20ஆம் திகதியுடன் மனிதன் முதலாவதாக நிலவிற்குச் சென்று வந்து, 39 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நீல் ஆம்ஸ்ட்ரோங், எடவின் அல்ட்ரின் ஆகியோர் நிலவிற்குச் சென்ற நாள் மறக்க முடியாத விண்வெளி வரலாறு. நிலவிற்குச் செல்வதென்பது இலகுவான காரியமா என்ன? அதற்கு அதிகளவு பயிற்சி



எடுக்க வேண்டும். அதிகளவு கற்க வேண்டும். ஆனால், நமக்கு நிலவிற்குச் செல்ல வாய்ப்புக் கிட்டாவிட்டாலும் குறைந்தது எமது பெயரையாவது நிலவிற்கு அனுப்புவதற்கான வாய்ப்பை 'நாஸா' வழங்கியுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நாஸாவிற்கு உங்களின் பெயரை சமர்ப்பிக்க முடியும். உங்களது பெயரை சமர்ப்பிக்க http:// lro.jhuapl.edu NameToMoon/ என்ற இணையத்தளத்திற்கு நீங்கள் செல்ல வேண்டும். நீங்கள் பெயரை சமர்ப்பித்ததும் குறித்த விண்ணோட்டப் பயணத்தில் கலந்து கொண்டமையை நினைவு கூரும் பொருட்டு, அந்நேரமே உங்களுக்கு நாஸாவினால் சான்றிதழும் வழங்கப்படும்.

Lunar Reconnaissance Orbiter (LRO) என்ற செயற்றிட்டத்தின் மூலம் நிலவிற்கு அனுப்பப்படவுள்ள விண்ணோடத்தில், சமர்ப்பிக்கப்படும் அனைத்துப் பெயர்களைக் கொண்ட Micro-chip பொருத்தப்பட்டு அனுப்பப்படவுள்ளது. உங்களால் நிலவுக்கு செல்ல முடியாவிட்டாலும் உங்கள் பெயரையாவது நிலவுக்கு அனுப்பலாமே!

## மாணவர்களுக்கு நாஸா அழைப்பு

மாணவர்களாலேயே முற்றிலும் உருவாக்கப்பட்ட விஞ்ஞானக் கருவிகளைக் கொண்ட, நிலவின் ஒழுக்கு வழியாக சஞ்சரிக்கக்கூடிய சிறியதொரு செய்மதியை உருவாக்க நாஸா, கல்லூரி மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. 'American Student Moon Orbiter' என்ற புதிய செயற்றிட்டத்தின் மூலமாக, அமெரிக்க மாணவர்கள், பல்கலைக்கழக குழாம், கல்விமான்கள் என அனைவரையும் இத்திட்டத்தில் சேரும்படி 'நாஸா' அழைப்பு விடுத்திருக்கிறது.

நாஸாவின் விஞ்ஞானிகளிடமிருந்து நேரடியாக மாணவர்கள் செய்மதி தொடர்பாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பினைச் சாத்தியமாக்கும் பொருட்டே, இச்செயற்றிட்டம் உருவாக்கப்பட்டதாக நாஸா தெரிவிக்கின்றது. இந்தச் செயற்றிட்டம் மூலமாக விண்வெளி ஆராய்ச்சி தொடர்பில் அதிக ஆர்வம் கொண்ட மாணவர்களை தேர்ந்தெடுக்கவும் அவர்களுக்கு முறையான அனுபவத்துடனான பயிற்சிகளை வழங்கவும் இதன் மூலம் வாய்ப்புகள் உருவாகும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். மாணவர்களின் ஆர்வத்திற்குத் தீனி போடும் வகையில் நாஸாவின் அழைப்பு விளங்குவது குறிப்பிடத்தக்கது.

# Proton-M ஓகஸ்டில் விண்வெளிக்கு






ரஷ்யாவின் Proton-M எனப்படும் வணிக ரீதியான ஏவுகணையானது, தனது விண்ணை நோக்கிய பயணத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் இது விண்ணுக்கு ஏவப்பட இருந்தபோதும் சில தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக அது சாத்தியப்படவில்லை. இதே வேளை, இந்தக் காலப்பகுதியில் லண்டனை மையமாகக் கொண்டியங்கும் Inmarsat நிறுவனத்தின் Inmarsat 4F3 என்ற செல்லிட தொடர்பாடல் செய்மதியும் விண்ணுக்கு ஏவப்பட ஏற்பாடாகியுள்ளது.

Proton-M ஏவுகணையில் காணப்பட்ட வாயுவறையொன்று அதிக வெப்பத்தின் காரணமாகவும் அமுக்கத்தின் காரணமாகவும் வெடித்தமையே குறித்த ஏவுகை தோல்வியில் முடிந்து போகக் காரணமானதென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், தற்போது குறித்த வாயுவறையின் சுவரானது தடிப்பான படையால் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால் ஏவுகையில் தோல்வியைச் சந்திப்பதற்கான வாய்ப்பு குறைவு என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.

இதேவேளை, Inmarsat 4F3 என்ற செய்மதியானது, சுமார் 6,000 கிலோகிராம் எடையைக் கொண்டதாகக் காணப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அறிந்து கொள்ளுங்கள்

✸ விண்வெளி என்பது மிகப் பெரிய விசித்திரமான பிரதேசம்தான். விண்வெளி வீரர்களுக்கே ஆச்சரியங்களை அள்ளி வழங்கும் வகையான தன்மையை விண்வெளி கொண்டிருக்கின்றது.

✸ ஈர்ப்பு விசையின் மிகப் பெரிய விளைவாக கருந்துளைகளைக் குறிப்பிடலாம். அது ஒளியைக் கூட அதனூடாக ஊடறுத்துச் செல்ல விடாத உயர் ஈர்ப்பு சக்தி மையத்தைக் கொண்டது. அதனால்தான் அதற்கு நிறமே இருப்பதில்லை. பொதுவாகக் கறுப்பாகவே காணப்படுகின்றது.

✸ பூமியின் மேற்பரப்பிலிருந்து மேல்நோக்கி குறைந்தது 80km பயணம் செய்த பின்னரே நாம் வெளிப்புறமான விண்வெளியை அடைந்து கொள்ளமுடியும்.





✸ விண்வெளியின் வெற்றிடத்தில் காணப்படும் பொருட்கள், சூரியனுக்கு வெளிக்காட்டப்படும் போது, மிக உச்சளவான வெப்பத்தை அடையும். அவ்வாறே, நிழல்களுக்கு வெளிக்காட்டப்படும் போது, அதீத குளிர்ச்சியை அனுபவிக்கும்.

✸ வானத்தில் காணப்படும் நட்சத்திரங்களில் மிகவும் பிரகாசமானது, Sirius ஆகும். இது பூமியிலிருந்து சுமார் 51 ட்ரில்லியன் மைல்களுக்கு அப்பால் காணப்படுகின்றது.

அத்தோடு, பூமிக்கு நெருக்கமாக அமைந்துள்ள நட்சத்திரங்களிலொன்றாகவும் இது காணப்படுகின்றது. Sirius என்ற நட்சத்திரத்தின் இன்னொரு பெயர் Dog Star என்பதாகும்.

✸ சூரியத்தொகுதியிலேயே மிக வேகமாக காற்றடிக்கும் கிரகம் நெப்டியூன்தான். இங்கு மணித்தியாலத்திற்கு 21,000 km என்ற வேகத்தில் காற்று வீசிக் கொண்டிருக்கிறதாம்!

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளுக்கிடை
# பேணும் இராஜ



இராஜதந்திர சேவைக்கு நீண்டகால வரலாறு இருந்து வருகின்றது. நாடுகளுக்கிடையில்அரசியல், பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளை வலுவாகப் பேணவும் நல்லுறவை வளர்க்கவும் இந்த இராஜதந்திர சேவை உதவியாக அமைகின்றது.

## தூதுவர்

நாடுகளுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பவும் அந்த நல்லுறவை பலப்படுத்திப் பேணிப்பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக நாடுகளுக்கிடையில் பரிமாறிக் கொள்ளப்படுவதற்கு இராஜதந்திரிகள் என்றழைக்கப்படுகின்ற தூதுவர்களுக்குத் தனி இடம் வழங்கப்படுகின்றது. இந்த தூதுவர்கள் ஊடாகவே அரசியல், பொருளாதார, கலாசார தொடர்புகள் வலுவான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

நாடுகளுக்கிடையில் உறவைப் பலப்படுத்துவதற்காக அரசியல் தலைவர்களை அடிக்கடி சந்திப்பது மிகவும் கடினமான காரியமாகும். அதனால், நாடுகளுக்கிடையில் உறவின் பாலமாக அமைவதற்குரிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக அரசாங்கங்கள் தூதுவர்களை தமது பிரதிநிதிகளாக நியமித்து அனுப்புகின்றன.

## வரலாற்றைப் புரட்டினால்

இலங்கையின் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் பண்டைய அரசர்கள் தமது தூதுவர்களை (இராஜதந்திரிகளாக) பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி சர்வதேச உறவைப் பலப்படுத்த முயற்சிகள் எடுத்திருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக கி.பி 45 ஆம் ஆண்டளவில் குவுண்டிஸ் மன்னரின் ஆட்சிக்காலத்தில் உரோமிற்கும் சீனாவிற்கும் போர்த்துக்கல், இந்தியா, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளுக்கும் இலங்கையில் இருந்து தூதுவர்கள் அனுப்பப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. அவ்வாறே பல்வேறு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தூதுவர்களாக இலங்கைக்கு வந்து போயுள்ளனர்.

## உலகளாவிய இராஜதந்திர சேவை

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் போக்குவரத்து முன்னேற்றம் காரணமாக இந்த இராஜதந்திரமட்ட சேவை துரிதமாக விரிவடையலாயிற்று. அதனால், இந்த உறவை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நாடுகளுக்கிடையில் நிரந்தரமான தூதுவர்களைப் பரிமாறிக் கொள்ளும் நிலை வளர்ச்சியடைந்தது. ஐக்கிய அமெரிக்கா கி.பி 1800 ஆம் ஆண்டளவில் இருந்தே ஏனைய நட்பு நாடுகளில் தமது நாட்டு தூதுவராலயங்களை நடத்தி வந்துள்ளது.



## முறையான தூதுவர்கள்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் நிறைவுடன் குடியேற்ற நாடுகள் பல சுதந்திர நாடுகளாயின. அதனைத் தொடர்ந்து ஐ.நா சபையும் ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாடுகளுக்கிடையிலான நட்புறவுகள் முறையாகவும் விரிவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதனால், நாடுகளுக்கிடையில் இராஜதந்திர மட்டத்தில் தூதுவர்களைப் (Ambassador) பரிமாறிக் கொள்வதிலும் சட்டதிட்டங்கள் வரையப்பட்டன. இவற்றுள் 1961 ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற ஒப்பந்தம் அல்லது சர்வதேச உறவு தொடர்பான உடன்படிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

## நியமனப் பத்திரம்

நாடுகளுக்கிடையில் நல்லுறவைப் பேணி வளர்ப்பதற்காகவும் வலுப்படுத்தவும் நியமிக்கப்படுகின்ற தூதுவர்கள் குறிப்பிட்ட நாட்டிற்கு செல்லும் போது அந்நாட்டின் தலைவரிடம் கையளிக்கும் பத்திரம் 'பதவிப் பிரமாணப் பத்திரம்' என்றழைக்கப்படுகின்றது.

ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுவர் (Ambassador) அந்த பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என்பது அந்தப் பதவிப் பிரமாணப்பத்திரத்தில் உறுதிப்படுத்தப்படுவதாக அமைகின்றது.




## உயர் ஸ்தானிகருக்கும் தூதுவருக்கும் இடையிலான வேறுபாடு

அரச தலைவரால் ஒரு நாட்டுக்காக நியமிக்கப்படுபவர் தூதுவராவார். ஆனாலும், பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளாக இருந்த பொதுநலவாய நாடுகளில் இருந்து நியமிக்கப்படுபவர்கள் உயர் ஸ்தானிகர்கள் (High Commissioner) என்றழைக்கப்படுவர்.

அதற்கு மேலதிகமாக ஏனைய நாடுகளில் இருந்து குறிப்பிட்ட நாடுகளில் பணிபுரிகின்றவர்கள் தூதுவர்கள் (Ambassadors) என்றழைக்கப்படுவர்.

## தூதுவராலயம்

குறிப்பிட்ட நாடொன்றின் தலைவரால் இன்னொரு நாட்டில் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படுபவர் தூதுவர் அல்லது உயர் ஸ்தானிகர் என்றழைக்கப்படுகின்றது.

இந்தப் பொறுப்புக்குரியவரின் தலைமையின் கீழ் குறித்த நாட்டுக்கான தூதுவராலயத்தில் அல்லது உயர் ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றுவதற்காக குறிப்பிட்ட நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் குழுவொன்றும் அனுப்பப்படும்.

## கொன்சல் அலுவலகம்

சில நாடுகள் குறிப்பிட்ட நாட்டின் விசாலத்தன்மை அல்லது பரப்பளவின் விசாலம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பிரதான நகரத்தில் உள்ள தூதுவராலயத்திற்கு மேலதிகமாக மேலும் பிரதான நகரங்களில் தூதுவராலயத்தின் இணைக்காரியாலங்களை ஏற்படுத்தும்.

அந்த அலுவலகங்களில் தூதுவரின் அல்லது உயர் ஸ்தானிகரின் அடுத்த பதவியில் உள்ள பதவியை உடைய ஒருவர் பொறுப்புக்களைக் கவனிக்க நியமிக்கப்படுவார். அவரே 'கொன்சல்' என்றழைக்கப்படுகின்றார்.

## வேறு நாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்கள்

இலங்கையின் தூதுவராலயங்கள் தற்போது 57 நாடுகளில் இயங்கி வருகின்றன. அந்த தூதுவராலயங்களில் 57 தூதுக்குழுக்கள் பணியாற்றுகின்றன.

அவற்றின் வகைகள் வருமாறு:

- உயர் ஸ்தானிகராலயங்கள் - 14
- பிரதி உயர் ஸ்தானிகராலயங்கள் - 01
- தூதுவராலயங்கள் - 32
- கொன்சல் அலுவலகங்கள் - 08
- இணைப் பிரதிநிதி அலுவலகங்கள் - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயில் நட்புறவு
# தந்திர சேவை

## இலங்கையின் தூதுவராலயங்கள்

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பிரேசில், இங்கிலாந்து,கனடா, சீனா, கியூபா, பிரான்ஸ், ஜேர்மனி, வத்திக்கான், இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், ஈராக், இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, குவைத், மலேசியா, மாலைதீவு, மியன்மார்,நேபாளம், நெதர்லாந்து, நோர்வே,பாகிஸ்தான், பாலஸ்தினம், கட்டார், ருஷ்யபெடரேசன், சவுதிஅரேபியா, தென் ஆபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, சுவீடன், தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தூதுவராலயங்கள் உள்ளன.




## நடைபெறும் சேவைகள்

ஆரம்ப காலப்பகுதியில் தூதுவராலயங்கள் ஊடாக மட்டுப்படுத்தப் பட்ட சேவைகளே நடைபெற்றன. தூதுவராலயம் அமைந்துள்ள நாட்டுடன் நெருக்கமான முறையில் நல்லுறவைப் பேணுவது முக்கிய பணியாகும். இன்று அனேகமான நாடுகளின் பொருளாதாரம் சர்வதேச வர்த்தகத்தில் தங்கியதாக இருக்கின்றது. இலங்கையும் இன்று இதே போட்டிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதனால், தூதுவராலயங்கள் ஊடாக,

* உல்லாசப் பிரயாணஅபிவிருத்தி
* ஏற்றுமதி வர்த்தகத்தை விரிவு படுத்துதல்
* முதலீட்டாளர்களை வடிவமைத்தல்.
* இலங்கை தொடர்பாக சரியான தகவல், பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற இலங்கைத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

## வெளிநாடுகளில் உள்ள இலங்கையரைப் பாதுகாத்தல்

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கைத் தொழிலாளர்களின் தேவைகளைக் கவனித்தலும் நலன்களைக் காத்தலும் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்கள் ஊடாக மேற்கொள்ளப் பட்டு வரும் முக்கிய பணியாகும்.

தொழில் ரீதியாக அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளின்போது இந்த தூதுவராலயங்களில் உள்ள அதிகாரிகள் அவர்களுக்கு உதவிகள் புரிகின்றனர்.

1990 ஆம் ஆண்டளவில் ஈராக்கில் நடைபெற்ற யுத்தம், 2006 ஆம் ஆண்டு லெபனானில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை என்பன இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அந்நாடுகளில் பணியாற்றிய தூதரக அதிகாரிகள் ஊடாக எமது நாட்டவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டதோடு அவர்களை இலங்கைக்கு திருப்பி அழைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக வெளிநாட்டு விவகார அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. வெளிநாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் அரசியல், பொருளாதார, கலாசார உறவுகளைப் பலப்படுத்துவதும் முன்னெடுப்பதும் இருதரப்பு நல்லுறவைப் பலப்படுத்துவதும் இந்த அமைச்சின் முக்கிய பொறுப்புக்களாகும்.

## இலங்கையின் ஆரம்பகால தூதுவர்கள்

### பாகிஸ்தானுக்கான தூதுவர்

இலங்கையின் பாகிஸ்தானுக்கான முதலாவது தூதுவராக இருந்தவர் டி.பி.ஜயா ஆவார். இலங்கை பற்றிய சரியான தகவல்களை பாகிஸ்தானுக்கு வழங்கவும் பாகிஸ்தான் பற்றிய சரியான தகவல்களை இலங்கைக்கு வழங்கவும் இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வை நல்லமுறையில் கட்டியெழுப்பவும் அவர் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

இரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்பவர்களுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்குதல், விசா வழங்குதல், வர்த்தக வாணிப நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புதல் பாகிஸ்தானில் கல்வி, சமூக மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் என்பன உயர் ஸ்தானிகரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன.

### மலேசியாவில் ஆணையாளர் சேவை

மலேசியாவில் இலங்கைக்கான முதலாவது தூதுவராக எம்.சரவணமுத்து 1949 ஆம் ஆண்டு நியமிக்கப் பட்டார். இலங்கையில் ஊடகவியலாளராக நீண்டகாலம் பணிபுரிந்த அவர் மலேசியாவிலும் பல பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

### இத்தாலிக்கான தூதுவர்

இத்தாலிக்கான இலங்கையின் முதலாவது தூதுவராக ஆர்.எஸ்.எஸ். குணவர்தன 1952 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

பின்னர் அவர் இங்கிலாந்திற்கான தூதுவராகவும் நியமிக்கப்பட்டார். அவரின் பின்னர் இத்தாலி தூதுவராலயத்தில் தகவல் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றிய எச்.ஏ.ஜே.ஹுலுகல்ல தூதுவராக நியமிக்கப்பட்டார்.

### இந்தோனேஷியத் தூதுவர்

இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவராக 1950 ஆம் ஆண்டு சி.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கர நியமிக் கப்பட்டார்.

அவரின் பின்னர் 1952 ஆம் ஆண்டு அதே பதவிக்கு ஏ.ஈ.குணசிங்க நியமிக்கப்பட்டார்.

* இலங்கையின் முதலாவது வெளிவிவகார அமைச்சர் டி.எஸ்.சேனாநாயக்கா ஆவார்.
* தற்போதைய வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம ஆவார்.

**அமீர் ஹுசைன்**



இலங்கையின் முதலாவது வெளிவிவகார அமைச்சர் டி.எஸ்.சேனாநாயக்க



நடப்புக்கால வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம

## இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்கள்

| | |
|---|---|
| * டி.எஸ்.சேனாநாயக்கா | - 1948-1952 |
| * டட்லி சேனாநாயக்கா | - 1952-1953 |
| * சேர்.ஜோன் கொத்தலாவல | - 1953-1956 |
| * எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க | - 1956-1959 |
| * டபிள்யூ தஹநாயக்க | - 1959-1960 |
| * சிரிமாவோ பண்டாரநாயக்க | - 1960-1965 |
| * டட்லி சேனாநாயக்க | - 1965-1971 |
| * சிரிமாவோ பண்டாரநாயக்கா | - 1971-1977 |
| * ஏ.சீ.எஸ்.ஹமீட் | - 1977-1989 |
| * ரஞ்சன் விஜேரத்ன | - 1989-1990 |
| * ஹரல்ட் ஹேரத் | - 1990-1993 |
| * ஏ.சீ.எஸ்.ஹமீட் | - 1993-1994 |
| * லக்ஷ்மன் கதிர்காமர் | - 1994-2001 |
| * டிரோன் பெர்னான்டோ | - 2001-2004 |
| * லக்ஷ்மன் கதிர்காமர் | - 2004-2005 (ஓகஸ்ட்) |
| * அநுர பண்டாரநாயக்க | - 2005 (ஓகஸ்ட்-நவம்பர்) |
| * மங்கள சமரவீர | - 2005-2007 |
| * ரோஹித போகொல்லாகம | - 2007 முதல் இன்று வரை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யால சரணாலயம்











இலங்கையிலுள்ள பாரிய நிலப்பரப்புகளுடனான வனப் பூங்காக்களில் இரண்டாம் இடத்தை வகிப்பது யால தேசிய வனமாகும். இது ஹம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை மாவட்டங்கள் இரண்டுக்கும் உட்பட்ட விசாலமான நிலப்பரப்பில் அமைந்துள்ளது. 1900 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதி யால வனப்பூங்காவானது பாதுகாப்பு வனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இது தேசிய வனப் பாதுகாப்பு சரணாலயமாக 1938 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப் பட்டது.


உலர் வலயக் காட்டுப் பிரதேசமாக இருக்கின்ற 'யால' சரணாலயத்தினுள் யானைகள் சுதந்திரமாக நடமாடித் திரிவதை காணலாம். இவை தவிர, காட்டெருதுகள், மான்கள், மரைகள், சிறுத்தைகள் உட்பட மயில், பருந்து, ஆந்தை, நாரைகள் போன்ற பல்வேறு பறவை இனங்களையும் ஊர்வனவற்றையும் பரவலாகக் காணலாம். இங்கு ஏராளமான ஏரிகள், சிறிய நீர்நிலைகளும் உள்ளன. இந்த சரணாலயம் சுமார் 129,700 ஹெக்டெயர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

# உயிரியலின் தந்தை

## -சார்ள்ஸ் டார்வின்



ஏழாவது வயதில்....




பரிணாமக் கோட்பாடு பற்றித் தெரிந்தவர்கள் சார்ள்ஸ் டார்வினைப் பற்றி அறியாமல் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், பரிணாமக் கோட்பாட்டின் தந்தையாகத் திகழ்பவர் சார்ள்ஸ் டார்வின் ஆவார். இக்கோட்பாடுகள் உயிரியலுக்கான அடிப்படையைத் தெளிவுபடுத்துகின்றன.

சமூக நல வைத்தியரும் நிதி பரிபாலன நிபுணருமான ரொபர்ட் டார்வின்-சுசன்னாஹ் தம்பதிகளுக்குப் பிறந்த ஆறு பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளையாக 1809 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி இங்கிலாந்தின் Shrewsbury எனும் இடத்தில் சார்ள்ஸ் ரொபர்ட் டார்வின் பிறந்தார்.

1817 ஆம் ஆண்டில் கிறிஸ்தவ சமயம் சம்பந்தமாக பிரசாரம் செய்யும் பாடசாலையில் இணைந்து கொண்டார். டார்வின் எட்டு வயதாக இருக்கும்போதே அவரது தாயார் இறந்துவிட்டார். 1818 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து அவரது வீட்டிற்கு அருகிலுள்ள கிறிஸ்தவ சமயம் சம்பந்தமான அங்கிலிக்கன் பாடசாலையில் சேர்ந்தார்.

1825 ஆம் ஆண்டளவில், ஸ்கொட்லாந்திலுள்ள எடின்பேர்க் பல்கலைக்கழகத்துக்கு மருத்துவம் கற்பதற்காகச் சென்றார். டார்வின் பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவனாக இருந்தபோது, உயிரியல் பரிணாமம் பற்றிய ஆய்வுகளில் மிக ஆர்வம் கொண்ட மாணவர்கள் அடங்கிய ஒரு கழகத்தில் இணைந்து கொண்டார்.

1827 ஆம் ஆண்டில் டார்வினின் மாணவர் தேர்ச்சி அறிக்கையைப் பார்வையிட்ட அவரது தந்தை, டார்வின் பரீட்சைகளில் குறைந்த புள்ளிகள் பெற்றிருப்பதைக் கண்டு கவலையுற்றார். இதனையடுத்து, அவரை கிறிஸ்தவ பாதிரியாராக்கும் நோக்கில் கேம்பிரிட்ஜ்ஜிலுள்ள கிரிஸ்ட்ஸ் கல்லூரியில் சேர்த்தார். அங்கு வேத-வேதாந்த சாஸ்திரத்தில் திறமை பெற்று விளங்கினாராயினும் கணிதவியல், பௌதிகவியல் போன்ற துறைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற மிகவும் சிரமப் பட்டார்.



ON

THE ORIGIN OF SPECIES

BY MEANS OF NATURAL SELECTION,

OR THE

PRESERVATION OF FAVOURED RACES IN THE STRUGGLE FOR LIFE.

By CHARLES DARWIN, M.A.,

LONDON:

JOHN MURRAY, ALBEMARLE STREET.

1859.

The Origin of Species நூலின் முகப்பு

இதே காலப் பகுதியில் தென் அமெரிக்காவை நோக்கி ஒரு குறிக்கோளுடன் கூடிய துணிகரமான கடற்பிரயாணத்தை மேற்கொள்வதற்காக டார்வின் சிபாரிசு செய்யப்பட்டார். இரண்டு வருடங்கள் நீடிக்கும் இக்கடற்பயணத்தை டார்வினின் தந்தையார் ஆரம்பத்தில் எதிர்த்தாலும் பின்னர் சம்மதித்தார்.

குறித்த ஆய்வுப் பயணத்தின்போது, டார்வின் உயிர்ப் பிராணிகள், புதைந்து கிடந்த பண்டைய பொருட்கள் மற்றும் புவியியலின் பல்வேறுபட்ட முக்கிய அம்சங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டினார். இத்தகவல்கள் திரட்டப்பட்டமை விஞ்ஞானத்துக்கு புதியதொரு திருப்பு முனையை வழங்கின எனலாம்.



சார்ள்ஸ் டார்வின் பல்கலைக்கழகம்

1839 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அவரது உறவினரான எம்மா வெட்ஜ்வுட் என்பவரை திருமணம் செய்தார். டார்வின் பத்துக் குழந்தைகளின் தந்தையாவார். அவற்றில் மூன்று குழந்தைகள் சிறுவயதிலேயே உயிரிழந்தன.

1853, 1864 ஆம் ஆண்டுகளில் டார்வின் 'றோயல்' கழகத்தினால் இரண்டு 'றோயல்' பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். உயிரியல் சம்பந்தமான பல ஆய்வுகளையும் தகவல்களையும் உள்ளடக்கி 1859 ஆம் ஆண்டில் "The Origin of Species' எனும் தொகுப்பொன்றை வெளியிட்டார். இத்தொகுப்பானது பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

சார்ள்ஸ் டார்வின் தனது வாழ்வின் இறுதி 22 வருடங்களிலும் தொடர்ச்சியாக பல நோய்களின் தாக்கத்திற்கு உட்பட்டார். எனினும், அவரது விஞ்ஞான ஆராய்ச்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றார். ஆராய்ச்சிகள், கட்டுரைகள், பரிசோதனைகள் என அவரது முயற்சிகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. பரிணாமம் என்றால் என்ன? என்பது தொடர்பான விரிவான விளக்கங்கள், டார்வினின் 'The Origin of Species' என்ற தொகுப்பின் பின்னர் தெளிவாக அறியப்பட்டன எனலாம்.

இத்தொகுப்பின் வெளியீட்டினைத் தொடர்ந்து பத்து வருட இடைவெளிக்குப் பின்பு 1871ஆம்ஆண்டு, அவரது சொந்த வெளியீடுகளான, 'The Desent of Man',"Selection in Relation to Sex' என்ற இரு நூல்கள் வெளியிடப்பட்டன. "The Expression of the Emotions in man and Animals' என்ற தொகுப்பு அவரது இறுதி வெளியீடாகும். இத்தொகுப்பினூடாக மனிதனினதும் விலங்குகளினதும் இயல்புகளை இலகுவாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.


இவர், 1882 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி இங்கிலாந்தின் டவுண் நகரில் காலமானார். அவரது உடல் சேர்.ஐசக் நியூற்றனின் உடலருகே அடக்கம் செய்யப்பட்டது.

பிற்காலத்தில் அவரை கௌரவிக்குமுகமாக பல்வேறுபட்ட கல்விசார் நிறுவனங்கள் (சார்ள்ஸ் டார்வின் பல்கலைக் கழகம், டார்வின் கல்லூரி-கேம்ப்ரிட்ஜ்), நகரங்களுக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டது. இவை தவிர, இவரது பெயரில் தேசிய பூங்கா ஒன்றும் உள்ளது.

-எஃப்.ஸாபீனாஸ்




டார்வின் தேசிய பூங்கா




டார்வினின் கல்லறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உடல்

நண்பர்களே இன்று நாம் கற்றுக் கொள்ளப் போகும் விடயம் மிகவும் முக்கியமானது. அதாவது எங்கள் உடல் உறுப்புகளைப் பற்றியது. உடலைப் பற்றிக் கற்றுக் கொள்ள நிறைய இருந்தாலும் ஒரே நாளில் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முடியாது அல்லவா. அதனால் எங்கள் உடலின் முக்கியமான உறுப்புகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் பற்றி மட்டும் இன்று ஆராய்ந்து பார்ப்போம்.



**மூளை** - உடல் உறுப்புகள் ஒன்று சேர்ந்து ஒழுங்காக வேலை செய்ய மூளை உதவுகின்றது.

**இதயம்** - உடலுக்குத் தேவையான இரத்தத்தை இதயம் வழங்குகின்றது. அத்தோடு இரத்தத்தை சுத்தம் பண்ணுகிறது.

**சுவாசப்பை** - நாம் மூச்சை உள் இழுக்கும் போது எங்களுக்குத் தேவையான ஒட்சிஜனை சுவாசப்பை உள் எடுக்கின்றது. மூச்சை வெளிவிடும் போது உடலிலுள்ள காபண்டயொக்சைட்டை வெளியேற்றுகின்றது.

**நுரையீரல்** - நாம் உண்ணும் உணவு வகைகளை சமிபாடடையச் செய்வதுடன் உடலுக்குத் தேவையான போஷாக்கினை நுரையீரல் பெற்றுத் தருகின்றது.

**ஐம்புலன்கள்**

**கண்** - வெளி உலகைப் பார்ப்பதற்கு கண் உதவுகிறது.

**காது** - அனைத்து விதமான ஒலிகளையும் கேட்க காது உதவுகின்றது.



**மூக்கு** - துர்நாற்றம், வாசனையை உணர்ந்து கொள்ளவும் சுவாசிக்கவும் இதன் மூலம் முடியும்.

**நாக்கு** - நாம் உண்ணும் உணவுகளின் சுவையை அறிந்து கொள்ளவும் பேசவும் இது உதவுகின்றது.

**தோல்** - எங்கள் உடலை போர்வை போல மூடியிருப்பது தோல். உடல் ஸ்பரிசம், குளிர், வெப்பம், மென்மை, கரகரப்பு போன்ற உணர்ச்சிகளை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

**எலும்பு** - வளர்ந்த மனிதனுடைய உடலில் 206 வகையான எலும்புகள் உள்ளன. உடலை கம்பீரமாகவும் கட்டுக்கோப்பாகவும் வைத்திருக்க எலும்புகள் உதவுகின்றன. அனைத்து எலும்புகளும் ஒன்று சேர்ந்திருப்பதை எலும்புக்கூடு என்கின்றோம்.

**தசை நார்கள்** - எங்கள் உடலில் 600க்கும் அதிகமான தசைநார்கள் உள்ளன. இவை எலும்புகளுடன் ஒன்று சேர்ந்தே செயல்படுகின்றன.



## நோயற்ற ஆரோக்கியமான தலைமுடியைப் பெற சின்ன அறிவுரை....

எங்கள் உடலிலுள்ள இன்னுமோர் பகுதி தலைமுடி... அது எங்கள் அழகை அதிகரிக்கச் செய்கின்றது. அழுக்கும் தூசும் தலைமுடியில் தொடர்ந்து படிவதனால் தலைமுடி வலுவிழந்து உடைந்து போகலாம். அது மாத்திரமல்ல தலைமுடி வலுவிழந்து போவதனால் அவலட்சணமான தோற்றத்தை உண்டு பண்ணும். குட்டி நண்பர்களே என்னைப் போல அழகாய் இருக்க உங்களுக்கும் விருப்பம் தானே... அப்படியானால் பால் புரொட்டீன் அடங்கிய லைப்போய் ஷம்பூவை தினமும் உபயோகியுங்கள். லைப்போய் ஷம்பூவை உபயோகிப்பதனால் நோயற்ற ஆரோக்கியமான தலைமுடியைப் பெறுவீர்கள்.

## ஞாபகத்திற்கு...



ஓர் மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை இதயமும் சுவாசமும் இயங்கிக் கொண்டே இருக்கும். இவை விஷேஷமான தசைகளினால் ஆக்கப்பட்டிருக்கும். அத்துடன் இவற்றை சரியான முறையில் எலும்புக்கூடுகள் பாதுகாக்கின்றன.


சுள்புளியின் பரிசு மழை



**நண்பர்களே, சிறப்பான பரிசுகளை வெல்ல உங்களுக்கு இன்னுமொரு வாய்ப்பு!**

**சிறுவர்களாகிய நீங்கள் செய்ய வேண்டியது, லைப்போய் வெற்று சஷே பக்கெட்டுகள் 4ஐ உங்கள் பெயர் முகவரி விபரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிக அழகான சுள்புளி அப்பியாசக் கொப்பிகளுடன் பாடசாலைப் பைகள் 1,500ஐ நீங்களும் வெல்லலாம்.**

முகவரி:
சுள்புளி பரிசுமழை, த.பெ.இல. 821,
கொழும்பு.

சென்ற வாரம் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் எதிர்வரும் வாரங்களில் எதிர்பாருங்கள்




மெலிதான வலுவிழந்த கூந்தலை, அடர்த்தியாகவும் வலிமை மிக்கதாகவும் ஆக்குகின்றது பால் புரொட்டீன் அடங்கிய லைப்போய் ஷம்பூ !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெனிசுவெலா - 2






## முக்கிய நகரங்கள்

வெனிசுவெலா அதிகளவில் நகராக்கத்திற்கு உட்பட்ட நாடாகும். 'கொரகஸ்' அதன் தலைநகரமாகும். அதேபோல் நாகரிகத்தின் இருப்பிடமாகவும் கலாசாரம் மற்றும் வர்த்தக மையமாகவும் 'கொரகஸ்' திகழ்கின்றது. கடற்கரையோரமாய் அழகிய காட்சிகள் நிறைந்த பள்ளத்தாக்கில் இந் நகரம் அமைந்துள்ளது.





அவ்வாறே, 'மாராகைபோ' எனும் நகரம் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகும். அது 'மாராகைபோ' எனும் ஏரிக்கரையில் அமைந்துள்ளது. நாட்டின் பெற்றோல் உற்பத்தியின் மத்திய நிலையமாக இந் நகரம் திகழ்கின்றது.

நாட்டின் உற்பத்திச் செயற்பாட்டில் முக்கிய பங்களிப்பை வழங்கும் மற்றொரு சிறப்பு வாய்ந்த நகரம் 'வெலன்சியா' ஆகும்.

## கல்வி

6 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்டோருக்குக் கட்டாயக் கல்விச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கு இலவசக் கல்வி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



## கலாசாரம்

கலாசாரத்தில் ஸ்பானியர்களின் தாக்கம் அதிகம் இருந்துள்ளது. நீண்ட காலமாக நாட்டில் வாழ்ந்து வந்த சுதேச மக்களால் தமது தனித்துவத்தைப் பேண முடியாமல் போனமையே ஸ்பானியர்களின் கலாசார உள்வாங்கலுக்குப் பிரதான காரணமாக இருந்துள்ளது. பூர்வீக குடிகளின் கலை மற்றும் இலக்கியச் செயற்பாடுகளில் ஸ்பானியர்களின் தாக்கத்தினை அதிகளவில் காணலாம்.

## பொருளாதாரம்

நாட்டின் பொருளாதாரம் கனிய எண்ணெய் வளத்தாலேயே கட்டி எழுப்பப்பட்டுள்ளது. 21 ஆம் நூற்றாண்டில் கனிய எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படுத்த ஆட்சியாளர்கள் முயன்ற போதும் அதனால் பயனேதும் ஏற்படவில்லை. வேலையின்மை நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், கடந்த காலங்களில் பெரும் நெருக்கடியும் ஸ்திரமற்ற தன்மையும் காணப்பட்டது.

✱ **விவசாய உற்பத்திகள்:** கோதுமை, சோளம், கரும்பு, அரிசி, வாழை, பழங்கள், மரக்கறி, இறைச்சி வகை என்பன.

✱ **கைத்தொழில்:** பெற்றோலியம், இரும்பு உருக்கு, கட்டட உபகரணங்கள், உணவு தயாரிப்பு, ஆடை, தகரம், அலுமினியம், மோட்டார் வாகனங்கள்,மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் என்பன.

✱ **ஏற்றுமதிப் பொருட்கள்:** பெற்றோலியம், அலுமினியம், தகரம், இரசாயனப் பொருட்கள், விவசாய உற்பத்திப் பொருட்கள்.

✱ **ஏற்றுமதி நாடுகள்:** அமெரிக்கா, நெதர்லாந்து,டொமினிக்கன் குடியரசு.

✱ **இறக்குமதிப் பொருட்கள்:** மூலப்பொருட்கள், இயந்திர உதிரிப் பாகங்கள், போக்குவரத்து உபகரணங்கள், கட்டடப் பொருட்கள்.

✱ **இறக்குமதி நாடுகள்:** ஐ.அமெரிக்கா, பிரேசில், மெக்ஸிகோ, கொலம்பியா.

✱ **நாணயம்:** பொலிவர் (VEB)

## போக்குவரத்தும் தொடர்பாடலும்

போக்குவரத்து கட்டமைப்புகள் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றன. 96,155 கிலோமீற்றர் நீளமான தரைப்போக்குவரத்துப் பாதைகள் உள்ளன. எனினும், புகையிரதப் பாதைகள் மோசமான நிலையிலேயே உள்ளன. அத்துடன், நாட்டின் மையப்பகுதியை ஊடறுத்துச் செல்லும் நதி வழிப்போக்குவரத்தானது முக்கிய இடத்தை வகிக்கின்றது.

நாட்டின் பிரதான விமானநிலையம் கொரகஸ் நகரிலேயே அமைந்துள்ளது. 2003ஆம் ஆண்டு கணிப்பின்படி, கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களின் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. தொலைக்காட்சி-வானொலி நிலையங்கள் சாதாரண மட்டத்தில் செயல்படுகின்றன.

பிரதான செய்தித்தாள்கள் உள்ளிட்ட சகல பத்திரிகைகளும் தலைநகரிலேயே பிரசுரமாகின்றன.

## ஆட்சி முறை

வெனிசுவெலா ஒரு ஃபெடரல் குடியரசாகும். 1999இல் மாற்றியமைக்கப்பட்ட அரசியல் யாப்பின்படி நாட்டில் ஆட்சிநடத்தப்படுகின்றது. ஜனாதிபதியே நாட்டின் அதிகாரம் நிறைந்த தலைவராவார். ஆறு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் தேர்தல் மூலம் அவர் தெரிவு செய்யப்படுவார். அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் ஜனாதிபதி தெரிவு செய்வார்.

# தேசப்பட உருவாக்கம்



'Cartography' என்பது தேசப்படங்கள் வரையும் கலையைக் குறிக்கின்றது. இந்த தேசப்படங்கள் எப்படி உருவாக்கப்பட்டன என்று உங்களுக்குத் தெரியுமா?

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு எகிப்தில் வாழ்ந்த மன்னர்களும் பிரபுக்களும் தங்கள் ஆட்சி எல்லைகளையும் நிலங்களின் எல்லைகளையும் குறித்து வைப்பதற்காக படங்களை வரையத் தொடங்கியுள்ளனர். அன்றைய காலகட்டத்தில் கடதாசி கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, அவர்கள் தங்கள் எல்லைகளைக் குறிக்கும் வரைபடங்களை களிமண்ணிலேயே வரைந்துள்ளனர். களிமண்ணில் பத்திரங்கள் போன்ற மெல்லிய தட்டுகளை அமைத்து, அதில் படங்களை வரைந்து அவற்றை சூளையில் சுட்டெடுத்து பாதுகாத்து வைத்துள்ளனர்.

காலப்போக்கில் கிரேக்க அறிஞர்கள் பலர் பூமியின் சுற்றளவைக் குத்துமதிப்பாகக் கணித்தும் பூமியில் கடகக் கோடு, மகரக் கோடு என்ற கற்பனைக் கோடுகளை வரைந்தும் வரைபடங்களை அமைத்தனர். பின்னர், கி.பி 2 ஆம் நூற்றாண்டில் அறிவியலாளர் க்லோடியஸ் டொலமி கடக, மகரக் கோடுகளில் சரியான அளவுகளுக்கேற்ப உலக வரைபடத்தை வரைந்து அதில் தேச எல்லைகளைக் குறித்தார்.



இதன்படி, உலக வரைபடத்தை முதன்முதலில் வரைந்தவர் என்ற பெருமை டொலமிக்கே உரித்தாகின்றது.

இவ்வாறு படிப்படியாக வரைபடக்கலை முன்னேற்றமடைந்து, இன்றளவில் மின்னணு வரைபடங்களும் (Eletronic Maps) புழக்கத்திற்கு வந்துவிட்டன. செய்மதிகளின் உதவியால் உருவாக்கப்படுகின்ற இந்த மின்னணு வரைபடங்களை கணினியின் உதவியுடன் வரைபடத்தின் எல்லாப் பகுதிகளையும் தனித்தனியாகவும் பெரிதாக்கி, சிறிதாக்கி என பல கோணங்களிலும் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(வினாத்தாள் II இன் தொடர்ச்சி)** நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்




**17 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

17. வண்ணத்துப் பூச்சி எங்கு முட்டையிடும்?
(1) இலை மடலின் உட்புறத்தில் (2) நீர் தேங்கியுள்ள இடங்களில்
(3) இலையின் கீழ்ப்புறத்தில் (4) மரப்பொந்துகளில்

18. இலங்கையை ஆண்ட அந்நியர்கள் அல்லாதோர்;
(1) ஆங்கிலேயர் (2) ஒல்லாந்தர் (3) அரேபியர் (4) போர்த்துக்கேயர்

19. இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல் எது?
(1) பைபிள் (2) மகாவம்சம் (3) திரிபீடகம் (4) திருக்குர்ஆன்

20. சுவரை நிலைக்குத்தாகக் கட்டுவதற்குப் பயன்படும் உபகரணம் எது?

(1)  (2)  (3)  (4) 


21. மிக அதிகமான மக்கள் பயணம் செய்யக்கூடிய போக்குவரத்துச் சாதனம் எது?
(1) விமானம் (2) பேரூந்து (3) புகைவண்டி (4) கார்

22. தொங்கும் துணி ஒன்றில் மிக கூடுதலாக மேலே உறிஞ்சப்படும் திரவம்?
(1) தேங்காய் எண்ணெய் (2) நீர் (3) பெற்றோல்
(4) மண்ணெண்ணெய்

23. பண்டைய காலத்தில் உணவு வகைகளை நீண்ட காலமாக பாதுகாத்து வைக்க கையாளப்பட்ட முறை எது?
(1) குளிரூட்டியில் வைத்தல் (2) தேனில் அமிழ்த்தி வைத்தல்
(3) தகரப் பேணியில் வைத்தல் (4) உப்பிடுதல்

24. நெல்லைக் குற்றி அரிசியை வேறாக்குவதற்கு பயன்படுத்தும் உபகரணம்

(1)  (2)  (3)  (4) 

25.  இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் சின்னத்தின் ஐந்து வளையங்களும் குறிப்பது;
(1) தீவுகள் (2) கண்டங்கள் (3) நாடுகள் (4) கடல்கள்

26. அரச இலட்சினையிலுள்ள  இவ்வடிவம் வெளிப்படுத்தும் கருத்து;
(1) தூய்மை (2) தர்மம் (3) சௌபாக்கியம் (4) உலக நிலைப்பாடு


27. பாடசாலை மாணவர்களால் ஆக்கப்படக்கூடிய புத்தளிப்புக் கருவி;
(1) சல்லாரி (2) கொம்பு (3) ரம் (4) தம்பட்டம்

28. கிராமிய விளையாட்டு எது?

(1)  (2)  (3)  (4) 





✱ **நான்கு பூக்களின் வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பெயர்களிடையே ஒவ்வொரு வரிப்படத்திற்கும் உரிய பெயரைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வரிப்படத்தின் கீழுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. அகத்தி | 2. கடதாசிப் பூ | 3. நீல அல்லி | 4. லில்லி |
| 5. குண்டு மல்லிகை | 6. ஓர்க்கிட் | 7. சூரியகாந்தி | 8. தாமரை |

29.  (30)  (31)  (32) 


✱ **உருவில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவிகளை இனங்கண்டு, அவற்றின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. தாளம் | 2. கொம்பு | 3. புல்லாங்குழல் | 4. ரம் |
| 5. மரக்காஸ் | 6. வயலின் | 7. தம்பூரா | |

33.  (34)  (35)  (36) 


37. தோட்டமொன்றிலிருந்து பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை 3700 ஆகும். அவற்றுள் 899 தேங்காய்கள் விற்கப்பட்டன. எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது? ..............................





38.  இவ்வுருவில் தனியாக அமைந்த 9 சிறிய முக்கோணிகள் உள்ளன. இவ்வாறான 86 முக்கோணிகளில் உள்ள சிறிய முக்கோணிகள் எத்தனை? ......................................

39. 720 மாம்பழங்கள் 4 பைகளில் சமனாக இடப்பட்டன. ஒரு பையில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ......................................

40. மோட்டார் வாகனமொன்றில் 27l பெற்றோல் இருந்தது. பயணமொன்றின் பின்னர் அதில் 19l 850ml பெற்றோல் எஞ்சியிருந்தது. பயணத்திற்கு செலவாகிய பெற்றோலின் அளவை தருக. ..............................................

41.  இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..........................

42.  இவ்வுருவின் சுற்றளவைக் காண்க? ......................................

43. கணித செய்கையை அவதானித்து அடைப்புக்குள் வரவேண்டிய இலக்கத்தை எழுதுக.

$$\begin{array}{r} \square\,4\,8 \\ +\ 1\,\square\,6 \\ \hline 9\,1\,4 \\ \hline \end{array} \qquad \begin{array}{r} \square\,\square\,7 \\ -\ 2\,6\,9 \\ \hline 3\,6\,8 \\ \hline \end{array}$$

44. 6m நீளமான கம்பித்துண்டு ஒன்றில், 2m 75cm நீளமுள்ள ஒரு துண்டு வெட்டப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது? ............ m ........cm

45. வெற்றிடத்தில் வரவேண்டிய சமவலுப் பின்னங்களுக்குரிய இலக்கங்களை எழுதுக.

$$\frac{3}{7} = \frac{\square}{14} = \frac{18}{\square}$$

46. கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலை அவதானித்து, கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| பொருட்கள் | விலை | |
|---|---|---|
| | ரூ | சதம் |
| சீனி 1kg | 58 | 00 |
| உருளைக்கிழங்கு 1kg | 75 | 00 |
| சிவப்புப் பருப்பு 500g | 52 | 50 |
| வெங்காயம் 250 g | 18 | 50 |
| பாசிப்பயறு 1kg | 83 | 50 |
| கடலை 500 g | 84 | 00 |

(1) 1kg 250g சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ..............................................
(2) 2kg 250g சிவப்புப் பருப்பு வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?..............................
(3) முரளி 1kg 750g கடலையை வாங்கி, கடைக்காரனுக்கு ரூபாய் 500.00 பணத்தைக் கொடுத்தான். கடைக்காரன் அவனுக்கு மீதியாக கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
..............................................

47. நிசாட் 07:45 மணித்தியாலத்திற்கு பாடங்களைப் படிக்கத் தொடங்கி 3 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் நிறுத்தினான். நிசாட் பாடங்களைப் படித்து முடித்த நேரம் யாது?
..............................................

48. பின்வரும் பந்தியை வாசிக்க.

வயோதிபர் ஒருவர் தள்ளாடியபடி நடந்து வருகின்றார். அவர் வீதியைக் கடக்க முற்படுகின்றார். தூரத்தில் ஒரு வாகனம் வேகமாக வந்து கொண்டிருக்கின்றது. வீதியோரத்தில் சற்றுத் தொலைவில் ஒரு சிறுவன் வந்து கொண்டிருக்கின்றான்..................

இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விவரிக்கும் வகையில் ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்)

1. ..............................................
2. ..............................................
3. ..............................................
4. ..............................................
5. ..............................................
6. ..............................................

(விடைகள் அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறப்போகும் க



இந்த வருடத்தில் எண்ணெய் விலையானது முன்னொருபோதும் இல்லாதவாறு மிக வேகமாக அதிகரித்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது. அந்த வகையில், எண்ணெய்யைப் பாவிக்கும் நாடுகளில் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, விலையேறிச் செல்லும் கனிய எண்ணெய்க்குப் பதிலாக மாற்று எரிபொருளைப் பாவிப்பதற்கு அதிகமானோர் சமகாலத்தில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத விலையேற்றம் காரணமாக, மிகவும் அதிகளவான தாக்கங்களை உணரும் நாடுகளாக மூன்றாம் உலக நாடுகள் விளங்குகின்றன. இலங்கையும் எண்ணெய் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாடாகும். இதனால், இன்றளவில் நாட்டிலுள்ள சகல பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளும் மிகவும் உயர்வடைந்தே காணப்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்றே, அபிவிருத்தி அடையாத, ஆனால் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கின்ற நாடுகளும் மாற்று எரிபொருளை, கனிய எண்ணெய்க்குப் பிரதியீடாகப் பயன்படுத்த ஆர்வங்காட்டி வருகின்றன. அதிகமான நாடுகள் தாம் கண்டுபிடித்துள்ள மாற்று சக்தி வளங்களை இன்றளவில் பாவிக்கத் தொடங்கியுள்ளதோடு, இதுவரையும் மாற்று சக்தி வளங்களைக் கண்டுபிடிக்காத நாடுகள், அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.


## கனிய எண்ணெய் என்றால்...

எட்வர்ட் ரொகபிலர், அல்ப்ரட் நோபெல் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்ட எண்ணெய் வர்த்தகம் இன்றளவில் உலகம் பூராகவும் வியாபித்துள்ளது. ஒரு நாட்டினது பொருளாதாரத்தினை மாற்றிப்போடும் சக்தியாகக் கூட கனிய எண்ணெய் தற்போது உருவெடுத்திருக்கிறது. கனிய எண்ணெய் என்பது, பூமிக்குள் தேங்கிக் காணப்படும் 'காபன்' கொண்ட பொருட்கள் மூலமாக இயற்கையாகவே உருவாக்கப்படுகின்ற 'காபன்' சேர்க்கையாகும். அது மசகு எண்ணெய் அல்லது இயற்கை வாயு என்ற சிக்கலான சேர்வையாகக் காணப்படுகின்றது. பூமியில் தேங்கிக் கிடக்கும் காபன் அடங்கிய பொருட்கள் உக்கி, கனிய எண்ணெய்யாக உருவெடுக்க மில்லியன் கணக்கான ஆண்டுகள் தேவைப்படும். அவ்வாறு அதிகமான காலமெடுப்பதற்கு அவை பூமியில் தேக்கமாகக் காணப்படுவதே காரணமாகும்.

இவ்வாறான தேக்கங்கள் பூமிக்கடியில் மட்டுமல்லாது கடலுக்கு அடியிலும் அமைந்து காணப்படுகின்றன. இந்த தேக்கங்கள் புவியியல் ஆய்வுகளின் மூலமாகக் கண்டறியப்பட்டு, மசகு எண்ணெய்யாகப் பெறப்படுகின்றது.

ஹைட்ரோ காபன் சேர்க்கையுடனான எரிபொருட்கள் இதன் பின்னரே தயாரிக்கப்படுகின்றன. அதாவது, மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டே இவை தயாரிக்கப்படுகின்றன.மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படுவதன் மூலம், நாம் பாவிக்கின்ற பெற்றோல், டீசல் மற்றும் ஹைட்ரோ காபன் சேர்வைகளான எரிபொருட்கள் தயார் செய்யப்படுகின்றன.





## 'ஒபெக்' அமைப்பு


ஈரான், ஈராக், குவைட் மற்றும் சவூதி அரேபியா ஆகிய எண்ணெய் வளம் காணப்படும் மத்திய கிழக்கு நாடுகளுடன், தென் அமெரிக்காவின் எண்ணெய் உற்பத்தி நாடான வெனிசுவெலாவும் இணைந்து 1960 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 'ஒபெக்' (OPEC) அமைப்பை ஸ்தாபித்தன. எண்ணெய் வளம் கொண்ட தமது நாடுகளிலிருந்து மிகவும் குறைந்த விலைக்கு எண்ணெய்யைப் பெற்றுக்கொள்ளும் செல்வந்த நாடுகளுக்கு முகம் கொடுப்பதே இந்த அமைப்பை ஸ்தாபிப்பதன் பிரதான நோக்கமாக அமைந்தது. சில நாடுகள் ஒன்று சேர்வதால் உருவான 'ஒபெக்' அமைப்பில் இன்றளவில் ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, தென் அமெரிக்கா மற்றும் தென்மேற்கு ஆசியா ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 18 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

## கனிய எண்ணெய்யோடு இணைந்த உலக பொருளாதாரம்

உலகின் எண்ணெய் விற்பனையானது இதுவரைக்கும் அமெரிக்க டொலரிலேயே தங்கியிருக்கின்றது. உலகின் ஏனைய நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற பண அலகுகளை டொலருடன் ஒப்பிட்டு டொலரொன்றினால் பெறக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமானத்தைக் கணக்கிடுவதன் மூலம் டொலரானது, 'ஒபெக்' அமைப்பின் பண அலகாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக, தேசிய ரீதியில் அல்லது வெளிப்புறமாக அமெரிக்காவிற்கு ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் மூலம் டொலரின் பெறுமானமும் மாற்றத்திற்குள்ளாகும். டொலரின் பெறுமானத்தில் குறைவு ஏற்படும் நிலையில் (அதாவது, டொலரொன்றின் மூலம் பெறக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமானம் குறைகின்ற போது) 'ஒபெக்' நாடுகளும் தமது விலையை உயர்த்துகின்றன. இந்தக் காரணத்தினால், கனிய எண்ணெய்யின் விலை அதிகமாவதோடு, நாட்டிலுள்ள சகல பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையும் அதிகரிப்பதைத் தடுத்துவிட முடியாது.

## எண்ணெய் சுத்திகரிக்கப்படு

### காய்ச்சி வடித்தல் முறை



எண்ணெய் சுத்திகரிக்கப்படும்போது பிரதானமாக காய்ச்சி வடித்தல் முறை பயன்படுத்தப்படுகிறது.
இதன்போது, கனிய எண்ணெய்யால் வெவ்
களாக வேறுபடுத்தப்படுகின்றது. இவ்வாறு வே
பெறப்படுகின்ற கூறுகள், மேலும் சுத்திகரிப்புக்
படுவதோடு, அதற்காக பல்வேறுபட்ட இரசாய
பயன்படுத்தப்படுகின்றன.

கனிய எண்ணெய்யில் காணப்
ஹைட்ரோ காபன்களின் கொதி நி
றுக்கு ஒன்று வித்தியாசமானதாகு
இங்கு காணப்படுகின்ற 'ஹைட்
வெவ்வேறு வெப்பநிலையில் ஆ
உட்படும். இவ்வாறு வெவ்வேறு
களின் கீழ், ஆவியாதலுக்கு உட்ப
'ஹைட்ரோ காபன்கள்' காய்ச்சி வ
பாட்டின் மூலம் வேறாக்கிப் பெற

### நெப்தா முறை


பெற்றோல் உற்பத்தியாக்கப்ப
வெப்பநிலை, அமுக்கம், கொதிநி
றைப் பயன்படுத்தி 'ஒக்டேன்' எ
கூடிய பெற்றோல் உருவாக்கப்பட
இதற்காக 'ஹைட்ரோ காபன்' சே
'நெப்தீன்' அதிகளவில் காணப்ப
'நெப்தா' பயன்படுத்தப்படுகின்ற

### வெடிப்பு முறை


நிறையில் கூடிய பாரிய 'ஹைட்
அணுக்கள், நிறையில் குறைந்த
மற்றும் டீசல் அணுவாக மாற்றப்ப
இதன்பின்னர், இரசாயனத் தாக்க
திரவப் பெற்றோல், டீசல், பெற்றே
என்பன பிரித்தெடுக்கப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய எண்ணெய்



## கனிய எண்ணெய்க்குப் பதிலாக




# மாற்று எரிபொருட்கள் உள்ளனவா?

கனிய எண்ணெய்ப் பற்றாக்குறையானது, போக்குவரத்து நடவடிக்கைகளிலேயே அதிகளவான பாதிப்புக்களை ஏற்படுத்தும். ஏனெனில், அதிகமான வாகனங்கள் பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றினாலேயே இயங்குகின்றன. எனவே, பெற்றோல், டீசல் ஆகியவற்றுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய மாற்று எரிபொருள் வகைகளின் பக்கம் அவதானத்தைச் செலுத்துதல் ஆரோக்கியமான முன்னெடுப்பாகும்.

### இரட்டை செயற்பாட்டு இயந்திரம் உள்ள கார்




சாதாரண கனிய எண்ணெய்க்குப் புறம்பாக,அமுக்கிய இயற்கைவாயுவை (Compressed Natural Gas) பாவிக்க முடியும். இயற்கை வாயுவும் ஒரு கனிய வளமாவதோடு, அதனுள் அதிகளவில் காணப்படுவது 'மெதேன்' ஆகும். மாற்று எரிபொருளாக 'மெதேன்' வாயுவைப் பயன்படுத்தக்கூடியதாக இருந்த போதும், அது விலையுயர்ந்த வாயுவாகவே காணப்படுகின்றது.

### மின்சாரத்தைப் பயன்படுத்தல்

அபிவிருத்தியடைந்த நாடுகள், இப்பொழுதே மின்சாரத்தின் மூலம் இயங்கக்கூடிய வாகனங்களைத் தயாரித்துள்ளன. இவ் வாகனத்தைச் செலுத்தும் நிலைக்கு நிக்கல் உலோகம், லித்தியம் அயன் அல்லது ஈய அமில மின்கல வலு உபயோகப்படுத்தப்படுகின்றது. இந்த வாகனங்களினால் சூழலுக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படமாட்டாது. இலங்கையிலும் இன்றளவில் மின்சார மோட்டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளன.



### சூரிய வாகனம்



மின்சாரம் மற்றும் கனிய எண்ணெய் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி, இந்த வாகனத்தைச் செலுத்த முடியும். தேவையேற்படும்போது, கனிய எண்ணெய்யை அல்லது மின்சாரத்தைப் பயன்படுத்தி இவ்வாகனத்தைச் செலுத்த முடியும். மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பொருட்டு, மின்சார இயந்திரத்தொகுதியோடு சூரிய கலப்பரப்பொன்றும் இந்த வாகனத்தில் காணப்படுவது விசேட அம்சமாகும்.


### உயிர் டீசல் பாவனை

வெவ்வேறு தாவரங்களிலிருந்து பெறப்படும் பொருட்களை தாக்கமடையச் செய்து, அதன் விளைவாக 'ஹைட்ரோ காபன்' உருவாக்கப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் இந்த முறையை வெற்றிகரமாகப் பாவித்தபோதும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளால் இந்த முறையைப் பாவிப்பதில் ஓரளவு சிக்கல்கள் தோன்றியுள்ளன. காரணம், இது விலையுயர்ந்த தொழில்நுட்பமாக இருக்கின்றமையாகும்.

### நீரைப் பாவித்தல்

எதிர்காலத்தில் பிரபல்யமான மாற்று எரிபொருளாக நீர் மாறிவிடும் வாய்ப்புகள் காணப்படுவதாக விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர்.




இங்கு வாகனத்திற்கு நீரிடப்படும் போது, நீர் ஆவியாவதால் நீரிலிருந்து ஐதரசன் பிரியும். இவ்வாறு பிரியும் ஐதரசன் மூலம் வாகனத்தின் இயந்திரம் உயிர்ப்பிக்கப்படும்.

### கனிய எண்ணெய் வளம் தீர்ந்துவிட்டதா?

கனிய எண்ணெய் வளம் எனப்படுவது, மீண்டும் மீண்டும் புதிதாக உருவாக்க முடியாத இயற்கை வளமாகும். அதனால், காலம் செல்லச் செல்ல கனிய எண்ணெய் வழங்களில் குறைவு ஏற்படுவது உறுதியானதே!

இதன் அடிப்படையில், மத்திய கிழக்கில் காணப்படும் எண்ணெய்த் தேக்கங்களின் ஆயுட்காலம் 75 வருடங்களுக்குக் குறைவாகக் காணப்படுவதோடு, லத்தீன் அமெரிக்காவின் எண்ணெய்த் தேக்கங்களின் ஆயுட்காலம் 37 வருடங்களாகக் காணப்படுகின்றது. ஆக, 2010 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்குத் தேவையான எரிபொருட்கள் தொடர்ச்சியாகக் குறைவடைந்து கொண்டு செல்லும்.

### உலக அழிவுக்கு கனிய எண்ணெய்யும் காரணமா?

கடந்த நூறாண்டுகளுக்குள் மனிதனினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் தகனத்தின் காரணமாக, பூமிக்கு தாங்க முடியாதளவு 'காபனீரொட்சைட்' வளிமண்டலத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது.



இதன் காரணமாக, பூமியின் வெப்ப நிலையானது, சாதாரண வெப்ப நிலையைக் காட்டிலும் 2°C ஆல் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆக, இயற்கை அனர்த்தங்களுக்கு கனிய எண்ணெய்யும் நேரடியாகவே தாக்கம் செலுத்தியுள்ளமை வெளிப்படையான உண்மையாகும்.

### ...திகரிக்கப்படும் முறை



...ணெய்யால் ... வெவ்வேறு ...தி...ன்றது. இவ்வாறு வேறுபடுத்திப் ...மேலும் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப் ...வேறுபட்ட இரசாயனத் தாக்கங்கள்

...ணெய்யில் காணப்படும் ...காபன்களின் கொதி நிலை ஒன் ... வித்தியாசமானதாகும். அதாவது, ...ப்படுகின்ற 'ஹைட்ரோ காபன்கள்' ...வெப்பநிலையில் ஆவியாதலுக்கு ...வ்வாறு வெவ்வேறு வெப்பநிலை ...ஆவியாதலுக்கு உட்படும் ...காபன்கள்' காய்ச்சி வடித்தல் செயற் ...ம் வேறாக்கிப் பெறப்படுகின்றது.

#### நெப்தா முறை

... உற்பத்தியாக்கப்படும்போது ..., அமுக்கம், கொதிநிலை ஆகியவற் ...டுத்தி 'ஒக்டேன்' எண்ணிக்கை ...றோல் உருவாக்கப்படுகின்றது. ...ஹைட்ரோ காபன்' சேர்க்கையான ...திகளவில் காணப்படுகின்ற ...ன்படுத்தப்படுகின்றது.

#### வெடிப்பு முறை

...கூடிய பாரிய 'ஹைட்ரோ காபன்' ...திறையில் குறைந்த பெற்றோல் ... அணுவாக மாற்றப்படுகின்றது. ...ர், இரசாயனத் தாக்கங்கள் மூலம் ...றோல், டீசல், பெற்றோலிய வாயு ...த்தெடுக்கப்படுகின்றன.

## இலங்கையிலும் மாற்று எரிபொருள் உண்டா?

மூன்றாம் உலக நாடாகிய இலங்கையும் எண்ணெய்யால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு முகம் கொடுத்த வண்ணமே உள்ளது. இன்றளவில் கனிய எண்ணெய்க்குப் பதிலாகப் பாவிக்கக்கூடிய மாற்று எரிபொருட்கள் தொடர்பில், ஆராய்ச்சி செய்வதற்கு இலங்கையும் ஆர்வம் காட்டி வருகின்றது. இதில் பிரதான மாற்று முறையாக 'பசுமை எரிபொருள்' (Green Fuel) தொடர்பில் அதிக ஆர்வம் காட்டப்படுகின்றது. பல தாவரங்களிலிருந்து, அதிலும் குறிப்பாக றப்பர் விதையை உபயோகித்து, வினைத்திறன் மிக்க பசுமை எரிபொருளை உருவாக்க முடியுமென இதுவரை கண்டறியப்பட்டுள்ளது.

தாவர இனமொன்றை உபயோகித்து பசுமை எரிபொருளைத் தயாரிக்கும் பொருட்டு, இப்போதே அம்பகொட கிராமத்தில் Tatrophacurcas என்ற தாவரம் பயிரிடப்பட்டுள்ளது. கரும்புத் தாவரத்தின் மூலமாகவும் 'எதனோல்' என்கின்ற எரிபொருள் உற்பத்தியாக்கப்படுகின்றது. குறைந்த செலவில் கூடிய பலனைப் பெற்றுக்கொடுப்பதற்கு 'எதனோல்' என்ற எரிபொருளுக்கு அதிக ஆற்றலுண்டு.

இந்நாட்டின் மின்சார உற்பத்தியில் அதிகளவு பகுதி (60%), டீசலினால் இயங்கும் மின்னுற்பத்தி இயந்திரத்தினை உபயோகப்படுத்தியே உருவாக்கப்படுகின்றது.



இதன் காரணமாக அதிகளவில் டீசல் தகனத்திற்குள்ளாகின்றது. இதற்கு மாற்றீடாக, நீர் மற்றும் அனல் என்பவற்றைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய இலங்கை முனைந்துள்ளது. இத்தகைய செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் ஏற்படும் பற்றாக்குறைக்கு வெற்றிகரமான தீர்வுகளைப் பெறமுடியுமெனக் கூறப்படுகின்றது.

–ஃபாத்திமா ஸாபீனாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாலைக்காட்சி

அன்று விடுமுறை நாளாகையால் நானும் எனது குடும்பத்தினரும் எமது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தோம். அவ்வீடு கடற்கரையோரம் அமைந்திருந்ததால் மாலை நேரம் நாங்களும் உறவினரும் சேர்ந்து கடற்கரைக்குச் சென்றோம்.

ஆஹா! என்ன அழகு. அனைவர் மனதையும் கவரக்கூடியதாய் கடலலைகள் மெல்ல மெல்ல கரையை நோக்கி அடித்துக் கொண்டிருந்தன. சூரியன் அடிவானில் தங்கத் தாரகை போன்று காட்சியளித்தான். தன் ஒளி முழுவதையும் மெல்ல மெல்லக் கடலினுள் புகுத்திக் கொண்டே எங்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டான்.

நாம்தான் நீங்கள் உண்ணும் உணவிற்கு சுவை சேர்க்கிறோம் என்ற மமதையில் தென்னை மரங்கள் அங்குமிங்குமாய் ஆடிக் கொண்டிருந்தன.

பறவைக் கூட்டம் தம் குஞ்சுகளுக்கு இரை கொடுக்கப் போகின்றோம் என்ற மகிழ்ச்சியில் கூட்டம் கூட்டமாய் பறந்து சென்றன.

இத்தொழிலே எங்களை வாழ வைக்கின்றது என்ற நம்பிக்கையில் மீனவர்கள் வள்ளங்களிலும் பாய்மரக்கப்பல்களிலும் கடலில் மிகத் தொலைவில் சென்று கொண்டிருந்தனர்.

அனைத்தையும் பார்த்த எனக்கோ மட்டில்லா மகிழ்ச்சி. மீண்டும் எப்போது இவ்விடத்துக்கு வருவேன் என்ற ஏக்கம் வேறு என் மனதில் எழுந்தது.

எம்.ஜே.ஃபாத்திமா ஆமிலா,
புத்தளம்.

# ஏமாற்ற நினைத்தால்

பாரதிக் கண்ணன் சிறு வயதிலேயே பல சரக்குக் கடை ஒன்றில் வேலைக்கு வந்து சேர்ந்தான். அவனது முதலாளியின் பெயர் தருமரூபன். சில காலம் வேலை செய்த பின் தனது சம்பளத்தைத் தரும்படி முதலாளியிடம் கேட்டான் பாரதிக்கண்ணன்.

அதற்கு முதலாளி "நீயோ இன்னும் விபரம் தெரியாத சிறுவனாய் இருக்கிறாய்... இந்நிலையில் உனது சம்பளத்தை உன்னிடம் தந்தால் அதனை உன்னால் பாதுகாக்க முடியாது. நான் எல்லாவற்றையும் சேர்த்துவைத்திருந்து ஒன்றாகத் தருகின்றேன்" என்றார்.

பாரதிக் கண்ணனும் சில வருடங்கள் கழித்து சம்பளத்தைக் கேட்டான். அப்போது முதலாளி "நீயோ இளைஞனாய் இருக்கிறாய். இந்த நிலையில் உன்னால் பணத்தைக் கையாளத் தெரியாது. எனவே, நான் சேர்த்துத் தருகிறேன்" என்றார்.



பாரதிக்கண்ணனுக்கு முதலாளி பற்றி தெரிந்து விட்டது. அவர் படு உலோபி மட்டுமல்ல. ஓர் ஏமாற்றுப் பேர்வழி என்பதும் வேலையாட்களுக்கு கூலி கொடுக்காத கொடியவன் என்பதும் தெரியவந்தது.




ஒருநாள் இரவு கடையில் பாரதிக் கண்ணன் மட்டும் உறங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது பல கள்வர்கள் கடையினுள் புகுந்து திருடினார்கள். பாரதிக்கண்ணன் உலோபியின் பொருட்களை கள்வர்கள் எடுப்பது நியாயமே என நினைத்து பேசாதிருந்து விட்டான்.

அடுத்த நாள் முதலாளி தனது கடைப்பொருட்கள் யாவும் களவாடப்பட்டிருப்பதைக் கண்டு வருந்தினார். அவர் பாரதிக்கண்ணனிடம் "உன்னை நம்பித்தானே... இவ்வளவு பொருட்களையும் பொறுப்பளித்தேன். நீ ஏன் பாதுகாத்துத் தரவில்லை?"எனவினவினார். அதற்கு பாரதிக்கண்ணன்,

"ஐயா! உங்கள் கருத்துப்படி எனது மாதச்சம்பளமான 1000/= ரூபாவை பாதுகாக்க முடியாத நான் எப்படிப் பல லட்சம் பெறுமதியான பொருட்களைப் பாதுகாக்க முடியும்?" என்று கேட்டான். முதலாளி வாயடைத்து நின்றார்.

எம்.ஏ.எப்.ஆஷா,
நீர்/அல்-ஹிலால் ம.க.,
நீர்கொழும்பு.

## நாடுகளும் தலைநகரங்களும்

| நாடு | தலைநகரம் |
|---|---|
| இலங்கை | ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டே |
| இந்தியா | புது டில்லி |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் |
| பங்களாதேஷ் | டாக்கா |
| ஜப்பான் | டோக்கியோ |
| சீனா | பீஜிங் |
| அவுஸ்திரேலியா | சிட்னி |
| அமெரிக்கா | வொஷிங்டன் |
| இங்கிலாந்து | லண்டன் |
| பிரான்ஸ் | பரிஸ் |
| சவுதி அரேபியா | ரியாத் |
| ரஷ்யா | மொஸ்கோ |
| தாய்லாந்து | பெங்கொக் |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் |
| மாலைதீவு | மாலே |

தொகுப்பு: ஏ.சீ.எம்.டில்ஷாட், ம.மா/கொத்/அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவ.

## பாராளுமன்றப் பெயர்கள்

| | |
|---|---|
| ✸ இலங்கை | - பாராளுமன்றம் |
| ✸ ஆப்கானிஸ்தான் | - சோலு |
| ✸ பிரித்தானியா | - பாராளுமன்றம் |
| ✸ சீனா | - தேசிய மக்கள் காங்கிரஸ் |
| ✸ டென்மார்க் | - பே கோன்றின் |
| ✸ ஹங்கேரி | - தேசிய சபை |
| ✸ இந்தியா | - இராஜ்ய சபை |
| ✸ ஈரான் | - மஜ்லிஸ் |
| ✸ அயர்லாந்து | - டயஸ் |
| ✸ ஜப்பான் | - டயற் |
| ✸ சோவியத் ரஷ்யா | - சுப்ரீம் சோவியத் |
| ✸ சுவீடன் | - றிக்ஸ்டாக் |
| ✸ ஐக்கிய இராச்சியம் | - காங்கிரஸ் |

தொகுப்பு: எம்.எஃப்.எஃப்.ஹரின், ப/சோ ராஸிக் பரீட் ம.வித்., பண்டாரவளை.

படத்தை
இங்கே
ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.................................
முகவரி:.................................
.................................
பாடசாலை:.................................
வகுப்பு:.................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

## நிலவு



வட்ட வட்ட வான் நிலவு
சுட்ட அப்பம் போல் நிலவு
எட்ட நிற்கும் பால் நிலவு
தொட்டு விடணும் வருவாயா?

மாலைவேளை வந்திடுவாய்
மனதுக்கினிமை தந்திடுவாய்
அமுதம் போல ஒளி தருவாய்
அழகுக்குவமை ஆகிடுவாய்.

வான் வீட்டில் வாழ்கின்றாய்
வாழ்வு முழுவதும் நகர்கின்றாய்
நட்சத்திரம் தலைமையிலே
நாளும் காவல் புரிகின்றாய்.

எம்.எம்.எப்.ஹிஜா,
மட்/அல்-அமீன் வித்., காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு







எம்.எஃப்.எம்.இம்ரான், தரம் - $11^{B}$, அல்-அஸ்ஹர் ம.கல்., கண்டி.



கே.எஃப்.ஃபஸ்லா, தரம் - 7, ஹதிரவலான ம.வித்., வெல்லாவ.




செ.சுலக்சன், தரம் - $8^{C}$, யா/கொக்குவில் இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



ஹரிஹரன், தரம் - 4, பம்பரகெலி த.வித்., லிந்துல.



வி.ரோஷினி, தரம் - $6^{B}$, இந்துக் கல்லூரி, கம்பளை.



ஏ.எஃப்.சஸ்னா, தரம் - $3^{B}$, அல்-இர்ஃபான் ம.ம.வித்., பந்தாவ.



எம்.என்.எம்.நாஸிக், தரம் - $8^{A}$, பதுரியா மத்திய கல்., மாவனல்லை.



எஃப்.ரிஸ்னா, தரம் - $8^{B}$, அலிகார் ம.வித்., கன் எலிய.



அங்.இல : 2019

ந.சுஜிகாந்த், தரம் - 3, விடத்தற்பளை கமலாசனி வித்.,யாழ்ப்பாணம்.



அங்.இல : 2020

ச.சார்ள்ஸ் அன்ரனி, தரம் - 4, கிளி/வட்டக்கச்சி ம.வித்., வட்டக்கச்சி.



அங்.இல : 2021

றிஸ்னாஸ் மொஹமட், தரம் - $6^{B}$, மட்/அந் நாஸர் வித்., மட்டக்களப்பு.



அங்.இல : 2022

த.சுகன்யா, தரம் - $6^{A}$, மீசாலை வீரசிங்கம் ம.வித்., மீசாலை.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2023

எஃப்.எஃப்.சாலிஹா, தரம் - $7^{L}$, அஸ்-ஸலாம் மு.ம.வித்., இறக்குவானை.



அங்.இல : 2024

மொஹமட் மஃபாஸ், தரம் - $8^{Q}$, றோயல் கல்., கொழும்பு.



அங்.இல : 2025

வே.இராயேஸ்வரி, தரம் - $9^{B}$, மு/மல்லாவி மத்திய கல்., மல்லாவி.



அங்.இல : 2026

ஜ.மு.சப்ராஸ், தரம் - $9^{A}$, மூதூர் மத்திய கல்., மூதூர்.



அங்.இல : 2027

மார்க்கண்டு கவிதா, தரம் - 10, யா/தாவடி இ.த.க. பாட., யாழ்ப்பாணம்.



அங்.இல : 2028

வி.விக்கிரமன், தரம் - $10^{B}$, கிளிநொச்சி ம.வித்., கிளிநொச்சி.



அங்.இல : 2029

ம.கியூட்சன், தரம் - $8^{A}$, நானாட்டான் ம.வித்., மன்னார்.



அங்.இல : 2030

ம.அனுஷன், தரம் - $12^{(கலை)}$, யா/அம்பன் அ.மி.த.க.பாட., குடத்தனை.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

கல்முனையைச் சேர்ந்த சம்சுடீன்-பஹ்மின் தம்பதிகளின் செல்வப் புதல்வி இஃப்ஃபத் றஃப்தா, தனது இரண்டாவது பிறந்தநாளை 10.07.2008 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்-நிப்றாஸ் மன்சூர்)



புத்தளம், தில்லையடியைச் சேர்ந்த றஹ்மான்-ஃபௌஸியா தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா றிப்கத் தனது மூன்றாவது பிறந்தநாளை 09.07.2008 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா-வாப்பா உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்-நஸீம்)



## ஓ..... உங்களுக்கு மட்டும்!

✱ அமெரிக்காவின் தேசிய கொடியில் மொத்தம் 50 நட்சத்திரங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த 50 நட்சத்திரங்களும் அமெரிக்காவின் 50 மாநிலங்களைக் குறிக்கின்றன.



✱ கம்போடியா நாட்டில் வண்டுகளைப் பொரித்துச் சாப்பிடுவார்களாம். ஆனால், ஜப்பானிலோ வண்டுகளை வீடுகளில் வளர்க்கிறார்களாம். ஆக, ஜப்பானியர்களின் செல்லப்(பூச்சி) பிராணிகளில் வண்டுகளும் உள்ளடக்கம்.

✱ லண்டன் நகரில் ஓடும் 'தேம்ஸ்' நதி முன்பெல்லாம் பனிக்காலத்தில் ஐஸ்கட்டியாக இறுகிவிடுமாம். அப்படி பனித்தரையாக இருக்கும் நாட்களில் அதை வியாபாரச் சந்தையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் அப்போதைய வணிகர்கள்.

✱ இத்தாலியைச் சேர்ந்த என்ட்ரியா அமாடி என்பவர்தான் வயலின் இசைக்கருவியை முதன்முதலில் கண்டுபிடித்துள்ளார். கி.பி 1552 இல் தயாரிக்கப்பட்ட அந்த முதலாவது வயலின், இத்தாலியில் இன்றுவரை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாம்.

✱ பாம்பு நாக்கினை அடிக்கடி வெளியே நீட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். ஏன் இவ்வாறு செய்கின்றதென்று தெரியுமா? அது தனது சுற்றுப்புறத்தை மோப்பம் பிடிக்கவே அவ்வாறு செய்கின்றது.



✱ 2004 ஆம் ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் 35 கோடி கணினிகள் தமது உழைப்புக்காலம் முடிந்து மின்னியல் கழிவுகளாக மாறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

ராணிக்கும் அம்மாவுக்கும் இடையில் நடைபெறும் இன்னும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

රාණි: අම්මා හිස පීරලා අරින්න.
அம்மா ஹிச பீரலா அரின்ன.
ராணி: தலையை வாரி விடுங்க அம்மா.

අම්මේ මගේ සපත්තු පරණයි.
அம்மே மகே சபத்து பரணய்.
அம்மா என்னுடைய சப்பாத்து பழசு.



මට අලුත් සපත්තු අරන් දෙන්න.
மட அலுத் சபத்து அரன் தென்ன .
எனக்கு புது சப்பாத்து வாங்கித் தாருங்கள்.

අම්මා: ලබන සුමානේ අලුත් සපත්තු අරන් දෙන්නම්.
லபன சுமானே அலுத் சபத்து அரன் தென்னம்.
அம்மா: வார கிழமை புது சப்பாத்து வாங்கித் தருகிறேன்.

දැනට අක්කාගේ සපත්තු දාගෙන යන්න.
தெனட அக்காகே சபத்து தாகென யன்ன.
இப்போதைக்கு அக்காவின் சப்பாத்தைப் போடுங்கள்.

රාණි: ඒක ලොකුයි අම්මේ.
ஏக லொக்குய் அம்மே.
ராணி: அது பெரிது அம்மா.



අම්මා: එහෙනම් මේ සපත්තුව දාලා බලන්න.
எஹெனம் மே சபத்துவ தாலா பலன்ன.
அம்மா: அப்போ இந்த சப்பாத்தை அணிந்து பார்.

රාණි: මේක කුඩයි අම්මේ.
மேக குடய் அம்மே.
ராணி: இது சிறியது அம்மா.

අම්මා: අදට ඔයාගේ සපත්තු දාගෙන යන්න.
அதட ஒயாகே சபத்துவ தாகென யன்ன.
அம்மா: இன்றைக்கு உன்னுடைய சப்பாத்தைப் போட்டுக் கொண்டு போ.

ලබන සුමානේ සපත්තු අරන් දෙන්නම්.
லபன சுமானே சபத்து அரன் தென்னம்.
வார கிழமை சப்பாத்து வாங்கித் தருகிறேன்.

රාණි: හොඳයි අම්මේ.
ஹொந்தய் அம்மே.
ராணி: நல்லது அம்மா.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: அம்மா தலையை வாரி விடுங்க.
අම්මා හිස පීරලා අරින්න

i அம்மா என்னுடைய சப்பாத்து பழசு.
..................................................

ii வார கிழமை புது சப்பாத்து வாங்கித் தருகிறேன்.
..................................................

iii அது பெரிது அம்மா.
..................................................

iv இது சிறியது அம்மா.
..................................................






**Can** எனும் எதிரிடை துணை வினைச் சொல்லை (Modal Auxiliary Verb) மூலவினைச் சொல்லுடன் (Stem Verb) கையாண்டு அமைக்கப் பட்ட 'உடன்பாடு' மற்றும் 'வினா' வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) I can watch.
என்னால் அவதானிக்க (பார்க்க) முடியும். **(உடன்பாடு வாக்கியம்)**

(ஆ) Can I watch?
என்னால் அவதானிக்க (பார்க்க) முடியுமா? **(வினா வாக்கியம்)**

(அ) You can cross.
உன்னால் கடக்க முடியும். **(உடன்பாடு வாக்கியம்)**

(ஆ) Can you cross?
உன்னால் கடக்க முடியுமா? **(வினா வாக்கியம்)**

(அ) We can wait.
எங்களால் காத்திருக்க முடியும். **(உடன்பாடு வாக்கியம்)**

(ஆ) Can we wait?
எங்களால் காத்திருக்க முடியுமா? **(வினா வாக்கியம்)**

(அ) They can do.
அவர்களால் செய்ய முடியும். **(உடன்பாடு வாக்கியம்)**

(ஆ) Can they do?
அவர்களால் செய்ய முடியுமா? **(வினா வாக்கியம்)**

**✸ மேற்படி வாக்கியங்களில் செயற்படுபொருள் (Object) சேர்க்கப்படு கின்றபோது, அவை பின்வருமாறு அமைகின்றன.**

(அ) I can watch the television.
என்னால் தொலைக்காட்சியைப் பார்க்க முடியும். **(உடன்பாடு)**

(ஆ) Can I watch the television?
என்னால் தொலைக்காட்சியைப் பார்க்க முடியுமா? **(வினா)**

(அ) You can cross that bridge.
உன்னால் அந்தப் பாலத்தைக் கடக்க முடியும். **(உடன்பாடு)**

(ஆ) Can you cross that bridge?
உன்னால் அந்தப் பாலத்தைக் கடக்க முடியுமா? **(வினா)**

(அ) We can wait at the school.
எங்களால் பாடசாலையில் காத்திருக்க முடியும். **(உடன்பாடு)**

(ஆ) Can we wait at the school?
எங்களால் பாடசாலையில் காத்திருக்க முடியுமா? **(வினா)**

(அ) They can do this work.
அவர்களால் இந்த வேலையைச் செய்ய முடியும். **(உடன்பாடு)**

(ஆ) Can they do this work?
அவர்களால் இந்த வேலையைச் செய்ய முடியுமா? **(வினா)**

(அ) The boys can swim in the river.
அந்த ஆண் பிள்ளைகளால் ஆற்றில் நீந்த முடியும். **(உடன்பாடு)**

(ஆ) Can the boys swim in the sea?
அந்த ஆண் பிள்ளைகளால் கடலில் நீந்த முடியுமா? **(வினா)**

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

## புவி வெப்ப அதிகரிப்பு

புவி வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து ஏழை நாடுகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முன்னேற்றமடைந்த நாடுகள் உதவ வேண்டுமென 'சார்க்' அமைப்பின் கூட்டறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பம் அதிகரிப்பதை தடுக்க இந்தியாவும் சார்க் அமைப்பின் இதர நாடுகளும் மூன்று ஆண்டு செயல்திட்டமொன்றை ஏற்றுக்கொண்டன. சார்க் நாடுகளின் இந்த கூட்டுப்பிரகடனம் மூன்று நாள் பிராந்தியக் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்டது.

புவி வெப்பம் அதிகரிப்பதால் சார்க் நாடுகளை வெகுவாக பாதிக்கும் இந்நாடுகளில் விவசாயப் பயிர்ச்செய்கைகள் பாதிப்படையும். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் முடங்கிவிடும். இயற்கைச் செல்வ வளம் குறைந்துவிடும்.

# ஆபிரிக்க நாடுகளுக்கு கூடுதல் நிதி வழங்க புஷ் கோரிக்கை



ஜி-8 மாநாட்டுத் தலைவர்களான இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி, ரஷ்ய ஜனாதிபதி மிட்ரி மெட்வதேவ், ஐரோப்பிய கமிஷன் தலைவர் ஜோஸ் மெனுவல் பெரெஸோ, பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் ஷார்கோனி, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், ஜப்பானிய பிரதமர் யசுவோ புகுடா,பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிரௌன், ஜேர்மன் தலைவர் அஞ்செலா மெர்க்கல் ஆகியோர் ஜப்பானின் ஹொக்கைடோவில் உள்ள வின்சர் ஹோட்டலில் வைத்து எடுத்துக் கொண்ட படம்.

ஆபிரிக்க நாடுகளுக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டுமென்று ஜப்பானில் நடைபெற்ற ஜி-8 உச்சிமாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கோரிக்கை விடுத்தார்.

உலகின் செல்வந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா, கனடா ஆகிய 8 நாடுகளின் கூட்டமைப்பு மாநாடு இடையிடையே கூடி உலக நாடுகளின் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றன.

இவ்வாண்டு இக்கூட்டம் ஜப்பானில் உள்ள ஹொகைடோ தீவின் ரசட்சு நகரில் நடைபெற்றது. இதில் இந்தியா, சீனா, பிரேசில், அவுஸ்திரேலியா, தென் கொரியா ஆகிய நாடுகள் நட்பு நாடுகள் என்ற ரீதியில், கலந்து கொண்டன.

இம்முறை இம்மாநாட்டில், ஆபிரிக்க நாடுகளுக்கு நிதி உதவி, உணவுப் பிரச்சினை, சிம்பாப்வே நாட்டு விவகாரம் ஆகிய மூன்று விடயங்கள் பிரதானமாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

## ஜப்பானில் நிலநடுக்கம்



ஜப்பானின் தெற்குக் கடற்கரை பகுதியில் கடந்தவாரம் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடலில் சுமார் 50 கிலோமீற்றர் ஆழத்தில் உள்ள நிலப் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.0 என்ற அளவில் பதிவானது. ஒகினோவா தீவிலேயே நிலநடுக்கம் உணரப்பட்டது.

கடல் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள போதிலும் சுனாமி ஏற்பட வாய்ப்புகள் இல்லையென புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

நிலநடுக்கம் ஏற்பட்ட ஒகினோவா தீவு, தலைநகர் டோக்கியோவிலிருந்து சுமார் 1600 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஜி-8 உச்சிமாநாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்பட்டது.

# புரூஸ்லி வாழ்ந்த விடுதி அருங்காட்சியகமாகிறது



புரூஸ்லி தனது இறுதி காலத்தில் வாழ்ந்த விடுதியை அதன் உரிமையாளர் அருங்காட்சியகமாக (மியூசியம்) மாற்றத் திட்டமிட்டுள்ளார். புரூஸ்லியின் ரசிகர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்தே அவர் இந்த ஏற்பாட்டைச் செய்து வருகிறார்.

பிரபல குங்பூ வீரரான புரூஸ்லி 1973 ஆம் ஆண்டு தனது 32 ஆவது வயதில் மர்மமான முறையில் இறந்தார். என்டர் த டிராகன், பிஸ்ட் ஒஃப் பியூரி, கேம் ஒஃப் டெத், பிக் பொஸ் போன்ற படங்களின் மூலம் அவர் ரசிகர்களின் உள்ளத்தில் சிறந்த மதிப்பையும் இடத்தையும் பெற்றிருந்தார்.



புரூஸ்லி தங்கியிருந்த விடுதி ஹொங்கொங்கின் கோவ்லூன் பகுதியில் அமைந்துள்ளது. இந்த விடுதியின் உரிமையாளரும் கோடிஸ்வரருமான 86 வயதுடைய யூ பாங்க்லின் இந்த விடுதியை விற்பனை செய்வதற்குத் திட்டமிட்டிருந்தார். எனினும், புரூஸ்லியின் ரசிகர்களின் ஒருமித்த வேண்டுகோள் காரணமாக அவர் இந்தத் திட்டத்தை மாற்றிக் கொண்டார்.

கடந்த வாரம் அவர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் இந்த விடுதியை ஓர் அருங்காட்சியகமாக்கும் வகையில் இதனை ஹொங்கொங் அரசுக்கு நன்கொடையாக வழங்க இருப்பதாகவும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் கூறினார்.

## அற்லஸ் கேள்வி - 160

**கேள்வி:** நிலநடுக்கம் உணரப்பட்ட தீவின் பெயர் என்ன?

சரியான விடை.............................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 160,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 156 இன் சரியான விடை: சீனா**

**பரிசு பெறுவோர்**

ரூ.ஷோபனா,
43, ரெட்ணம் வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

ஜெ.ஏ.எஃப்.ஜெஸ்மினா,
37E, கஹட்டோவிட,
வெயாங்கொடை.

பஸ்மில் அஹமட்,
83, வெளியாய, மாஹோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹா....ச்சிங்.....!

# இலகுவில் தொற்றும் தடிமன்


ஓய்வாக இருத்தல்

**தடிமனால் பீடிக்கப் படாதவர்கள் நம்மில் எவருமில்லை. வகுப்பறையில் உங்கள் நண்பரோ அல்லது நண்பியோ தடிமனால் பீடிக்கப்பட்டிருந்தால் அல்லது வீட்டில் உங்கள் சகோதர, சகோதரிகள் தடிமனுக்கு உட்பட்டிருந்தால் அடுத்த ஓரிரு தினங்களில் அது உங்களுக்கும் தொற்றிவிடும் அல்லவா?**

### நோயின் வரலாறு

தடிமனானது முற்காலத்திலிருந்தே மனிதனைப் பீடித்து வரும் ஒரு தொற்றுநோயாகும். இந்நோயானது மனிதர்களுக்கு மாத்திரமல்ல, எமது மூதாதையர்களெனக் கருதப்படும் சிம்பன்சி, கிபன் உள்ளிட்ட குரங்கினங்களுக்கும் ஏற்படுகின்றதாம். எனினும், தடிமனை ஒரு நோயாக அல்லது தொற்று நோயாக 1914 ஆம் ஆண்டில்தான் இனங்கண்டுள்ளார்கள். அத்துடன், 1950 ஆம் ஆண்டில்தான் 'வைரஸ்' கிருமிகளினால் தடிமன் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டது.

### நோய்க் காரணி

தடிமன் ஏற்படுவதற்கு 200 வகையான 'வைரஸ்' கிருமிகளே காரணமாக இருக்கின்றன. இவற்றில் 35% மானவை 'ரைனோவைரஸ்' தொகுதியைச் சார்ந்தவையாகும். மேலும் 30% மானவை 'கொரொனாவைரஸ்' தொகுதியைச் சார்ந்தன. ஏனையவை 'எடினோவைரஸ்' உள்ளிட்ட மற்றும் சில வைரஸ்களைச் சார்ந்தவையாகும். இந்த வைரஸ்களில் ஏதாவது ஒரு வைரஸ் எம்மைத் தாக்கினாலும் ஏற்படக்கூடிய விளைவுகள் ஒரே விதமாகவே இருக்கும்.


தும்மும்போது நோய்க்கிருமிகள் சூழலில் பரவுகின்றன

### நோய்க்கு ஆளாவோர்

சிறுவர்களுக்கும் முதியோர்களுக்குமே இலகுவில் தடிமன் ஏற்படுகிறது. இளைஞர்களுக்கும் நடுத்தர வயதினருக்கும் மிகக் குறைவாகவே ஏற்படும். ஒவ்வொருவரினதும் உடல் எதிர்ப்பு சக்தியைப் பொறுத்தே தடிமன் தொற்றுகின்றது. கூடிய எதிர்ப்பு சக்தி உள்ளவர்களை தடிமன் இலகுவில் நெருங்காது. மாணவர்களைப் பொறுத்தவரையில், வகுப்பறையில் பல மாணவர்கள் ஒன்று கூடுவதனாலும் வகுப்பறை உபகரணங்களில் ஒரே பொருளை பலர் தொடுவதனாலும் அடிக்கடி தடிமன் ஏற்பட வாய்ப்புண்டு.


வெந்நீரால் ஆவி பிடிக்கவேண்டும்

### பரவும் விதம்

சுவாசத் தொகுதியூடாகவே தடிமன் பரவுகின்றது. இந்நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இருமுவதனாலும் தும்முவதனாலும் உமிழ்வதனாலும் வைரஸ்கள் சூழல் எங்கும் பரவுகின்றன. சூழலிலுள்ள இந்த நோய்க் கிருமிகள், சுகதேகி ஒருவரின் உட்சுவாசத்தின் போது உட்செல்வதனால் குறித்த நபருக்குத் தடிமன் ஏற்படுகின்றது.

வைரஸ் கிருமிகளுள்ள ஏதாவதொன்றைத் தொட்ட கைகளால் கண்களைக் கசக்குவது, மூக்கைத் துடைப்பது, ஏற்கனவே தடிமனுள்ள நோயாளிக்கு கைகொடுப்பது, அவரைத் தொடுவது, அவர் பயன்படுத்திய துவாய்,கைக்குட்டை மூலமாகவும் இந்நோய் பரவும் வாய்ப்புகள் அதிகம்.

### பக்க விளைவுகள்

வைரஸ்களினால் மூக்கின் கலங்களில் வெடிப்பு ஏற்படல் அல்லது அந்த வைரஸ்கள் குருதியுடன் கலப்பதற்கான வாய்ப்புகள் குறைவாயினும் சுவாச நாளங்களுக்குள்ளும் நுரையீரலுக்குள்ளும் 'வைரஸ்' கிருமிகள் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம். சுவாசத்தின் மூலம் சுவாசத் தொகுதியினூடாக நடுக்காது வரை வைரஸ்கள் சென்று தடிமன் பரவலாம்.

இதேவேளை, தடிமன் ஏற்படும் போது சுவாசத்தொகுதியினுள் செல்லும் வேறு பக்றீரியாக்களும் உண்டு. இந்த நோய்க் கிருமிகளினால் நியூமோனியா, சுவாசத் தொகுதி தொடர்பான நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. பொதுவாகப் பிள்ளைகளுக்கு தடிமன் ஏற்பட்டால் அதனுடன் காதின் மத்திய பகுதியில் வலிஏற்பட வாய்ப்பு உண்டு.

இதற்குக் காரணம், மூக்கையும் காதையும் இணைக்கும் ஊத்தேக்கியா கால்வாய் வழியாக வைரஸ் கிருமிகள் பரவுகின்றமையாகும்.

### நோய்க்கான அறிகுறிகள்

தொண்டை அரிப்புடன் ஆரம்பித்து, மூக்கினூடாக சளி வெளியேறத் தொடங்குவதை அடுத்து மஞ்சள் அல்லது இளம் பச்சை நிறச் சளியாக மாறுவது தடிமன் நோயின் இயல்பாகும்.

கண்களில் நீர் வடிதல், சாதாரண காய்ச்சல், தொண்டை அரிப்பு, உடல் குளிர்ச்சியடைதல், உடல் வேதனை (குறிப்பாக தசை மற்றும் எலும்பு நோ), தலைவலி என்பனவற்றில் சிலவற்றையேனும் ஏற்படுத்தி ஒரு வாரமளவில் உடல் எதிர்ப்பு சக்திக்கு வைரஸ் ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கி விடும்.


வெந்நீரையே பயன்படுத்துங்கள்



### தடுப்பதும் சிகிச்சையும்

இதனை முற்றாக ஒழிக்க தடுப்பூசிகள் எதுவும் இல்லை.

ஒருமுறை தடிமன் ஏற்பட்ட பின்னர் உடலில் ஏற்படக்கூடிய நோய் எதிர்ப்புசக்தி பயனளிக்காமையினால் மீண்டும் ஏற்பட வாய்ப்புண்டு. காரணம், இந்த வைரஸை அழிக்க முடியாமையாகும்.

நீராவி பிடித்தலினூடாக நோயின் தன்மையை ஓரளவு குறைக்கலாம். கொத்தமல்லி, தேநீர் மேலும் பல நீராகாரங்களை சூடாக அருந்துவது நல்லது. நன்கு ஓய்வெடுக்க வேண்டும். அத்துடன் எப்போதும் சூடான நீரை அருந்துவதோடு முகம் கழுவுவதற்கும் வெந்நீரையே பயன்படுத்த வேண்டும்.

**-இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பருக்கு ஏற்பட்ட கோர நிகழ்வு



ஒப்பரேட்டர் மாதவனுடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் தனது நீண்ட நாள் கனவான படம் ஓட்டும் வேலையைக் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருப்பதை நினைத்து மகிழ்ச்சியடைந்தாலும் காவல்காரர் வரும் வரையில் இரவில் தனியாக இருந்து காவல் காக்க வேண்டியுள்ளதே என்பதை நினைக்கையில் விமலுக்கு மிகுந்த பயமாக இருந்தது. அவன் ஆழ்ந்த யோசனையில் இருப்பதைக் கண்ட ஒப்பரேட்டர் மாதவன் “என்ன தம்பி பலமாக யோசித்துக் கொண்டு இருக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

முதல்நாள் இரவு அவன் தனிமையில் இருந்தபோது அந்தப் பெண் வந்தது பற்றியும் பேச்சுக்குரல் கேட்டது பற்றியும் சொல்ல நினைத்தவன் எடுத்த எடுப்பிலேயே அதைச் சொல்லிவிட்டால் அவர் தன்னை ஒரு பயந்த சுபாவமுடையவன் என்று நினைத்து விடுவார் என்று எண்ணி சாதாரணமாகப் பேசலானான்.




“அண்ணா, வந்து.... நீங்கள் நீண்ட காலமாக தியேட்டரில் வேலை செய்வதால் கேட்க விரும்புகிறேன். தியேட்டர்களில் இரவு நேரத்தில் ஆவிகள் உலாவும் என்று சொல்கிறார்களே. அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டான்.

அவன் இப்படிக் கேட்டதும் அவர் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கலவரமும், பீதியும் அடைந்தது போல அவனை நோக்கினார். அவருடைய முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைக் கண்டு விமல் அதிர்ச்சியடைந்தான். ‘இவருடைய வாழ்விலும் ஏதோ நடந்திருக்கிறது போலிருக்கிறது’ என்று நினைத்தவன்,

“என்ன அண்ணா, ஆவிகள் பற்றிக் கேட்டதும் ஏன் இப்படி யோசிக்கிறீர்கள்?” என்று கேட்டான். அவர் நீண்ட பெருமூச்சை விட்டுவிட்டு சொல்லத் தொடங்கினார். “வந்து தம்பி, தியேட்டர்களில் இரவு நேரங்களில் பேய்,பிசாசு, ஆவி உலாவுவதாக அநேகர் கூறுகிறார்கள். வெளிநாடுகளில் கூட இரவு நேரங்களில் பல தியேட்டர்களில் பேய், பிசாசுகள் ஆவிகள் உலாவுவதாகக் கேள்விப்பட்டு இருக்கிறேன். சில தியேட்டர்கள் இருக்கும் இடங்களில் இரவில் ஆள் நடமாட்டமே இருக்காதாம்”

இப்படிக் கூறி நிறுத்தியவரிடம் விமல், “அது சரி அண்ணா... அதற்காக நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்?” என்று கேட்டான். அதற்கு அவர், “நான் பயப்படவில்லை தம்பி. நான் முன்னர் வேலை செய்த தியேட்டரில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை நினைத்துக் கொண்டேன்”

“அப்படியா? ஏன் என்ன நடந்தது?”

“அங்கு என்னுடன் வேலை செய்த சக ஊழியரான என் நண்பரை ஒருநாள் இரவு பேய் அடித்துக் கொன்று விட்டது” மாதவன் இப்படிக் கூறியதும் விமல் தன்னையும் அறியாமல் “ஆ.....” என்று அலறிவிட்டான்.

அவன் அப்படி அலறியதைக் கேட்டு “என்ன தம்பி, நீங்களும் பயந்துவிட்டீர்களா?” என்று கேட்டார்.

விமல் உள்ளூரப் பயந்து விட்டாலும் அதனை தனக்குள்ளேயே மறைத்துக் கொண்டு இயல்பாகவே பேசலானான்.

“இல்லை அண்ணா... அவரை நினைக்கையில் கவலையாக இருக்கிறது. உண்மையில் அவர் பேய் அடித்துத்தான் இறந்தாரா அல்லது வேறு எதுவும் காரணமா...?”

“அது பற்றி எனக்குத் தெரியாது தம்பி. அவர் இறந்த பின்னர் எனக்கு அங்கு இருக்கப் பிடிக்காமல் வந்துவிட்டேன்” என்று கூறினார்.

விமலுக்கு இப்பொழுது பயத்தோடு சேர்ந்து தர்ம சங்கடமான நிலை. “இவரிடம் போய், முதல் நாள் நடந்த சம்பவங்களை அதாவது பெண் ஒருத்தி வந்ததையும் சிலர் பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டதையும் எப்படி சொல்வது? நான் இன்றிரவும் தனியாக இருந்து காவல் வேலை செய்ய வேண்டியிருக்கிறதே? இவர் இங்கு பேய், பிசாசு இருப்பதாகவும் மோகினி இருப்பதாகவும் கூறிவிட்டாரென்றால் ஏற்கனவே பயத்தில் இருக்கும் நான் இன்று எப்படி இந்தக் காவல் வேலையைச் செய்வேன்? அதனால் இவரிடம் நேற்று நடந்தது எதையும் சொல்லாமலிருப்பதே நல்லது’ என்று நினைத்துக் கொண்டான்.

அப்போது அங்கு இரண்டு ஊழியர்கள் ஒரு பெரிய பெட்டியை தூக்கிக்கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றார்கள்.

(தொடரும்)

# மனித உருவில் கடவுள்

பரமனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. நாக்கு உலர்ந்துபோய் மேலன்னத்தோடு ஒட்டிக்கொண்டது. எச்சில் கூட சுரக்கவில்லை.

ஒரு பிடி சோற்றுக்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வேலை செய்ய அவன் தயார். ஆனால், அனாதையான அவனை நம்பி யார் வேலை தருவார்கள்?

ஒரு டீக்கடை வாசலில் தயங்கித் தயங்கி நின்றான் பரமன். ‘டிபன் ரெடி’ என்ற போர்டு, அவன் வயிற்றை வாட்டியது. அவனுக்கு ஒரு வேலை கொடுத்து ஆதரிப்பாரும் இல்லை. நீண்ட நேரத் தயக்கத்துக்குப் பின் ஒரு முடிவோடு கடைக்குள் நுழைந்த பரமன், பசி தீரச் சாப்பிட்டான்.

அடுத்து அடியோ, திட்டோ, சூடோ எதையும் தாங்கிக்



கொள்ள தன் மனதையும், உடம்பையும் தயார்படுத்திக் கொண்டே, கொடுக்கப்பட்ட பில்லுடன் கடை முதலாளியிடம் சென்றான்.

“ஐயா... என்கிட்டக் காசில்லை. என்னை எவ்வளவு வேணும்னாலும் அடிங்க. என்னால பசி தாள முடியாமத்தான் சாப்பிட்டுட்டேன்...” என்றான் குரல் நடுங்க.

அதைக் கேட்ட ஒரு வேலையாள், “என்னடா சொன்னே, காசில்லையா?” என்று ஆத்திரத்துடன் கத்தியபடி பரமனை அடித்துக் கீழே தள்ள, அவனது சட்டை கிழிந்தது. எலும்பும் தோலுமாய் இருந்த அவன் உடம்பு முழுவதும் கன்றிக் காய்த்துப் போயும் சூடுபட்ட தழும்புகளோடும் இருந்தது. அதைக் கண்ட முதலாளி, கல்லாவிலிருந்து பதறி எழுந்து சிறுவனை நோக்கி ஓடிவந்தார்.

“இது என்னப்பா, உடம்பெல்லாம் காயம்?” என்று கேட்டார் பதற்றம் மாறாமல்,

“சாப்பிட்டுட்டு காசு தரலைன்னா அடியோ, சூடோதான் ஐயா கிடைக்கும்? என்னை நம்பி வேலையா தருவாங்க?” என்றான் பரமன் கண்ணீருடன்.

அதைக் கேட்ட முதலாளி, ‘ச்சீ... என்ன மனிதர்கள்’ என்று தனக்குள் நொந்து கொண்டார். பரமனை அடித்த வேலையாளையும் திட்டினார்.

“தம்பி... நீ பிச்சை எடுக்காம, அடுத்தவரை ஏமாத்திப் பிழைக்காம, வேலை கொடுங்க செய்வேன்னு சொல்ற பாரு, அந்தக் குணம் பிடிச்சிருக்கு.... அதனால, உனக்கு வேலை தர்றேன்..” என்று அவர் கூற, கண்கலங்க நின்றான் பரமன்.

முதலாளி தொடர்ந்து பேசினார்....

“பசின்னா என்னன்னு எனக்கும் தெரியும் தம்பி. ஒரு வாய் சோறு கிடைக்காதான்னு மனசு தவிக்கும். ஒரு வேளை சோற்றுக்காக உயிரையே கொடுத்துடலாம்னு உடம்பு துடிக்கும்... நீயும் என் புள்ள மாதிரித்தான். நானே உன்னைப் பாடசாலையில் சேர்த்துப் படிக்க வைக்கிறேன். காலை, மாலையிலும் விடுமுறை நாட்களிலும் உன்னால முடிஞ்ச அளவு வேலை செய்தால் போதும்...” என்றார் முதலாளி.

பரமன் கடவுளைப் பார்த்ததில்லை. அவனுக்கு அந்த நேரத்துக்கு அந்த நல்ல மனிதரே கடவுளாகத் தெரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் ஒரு மீட்டல்





இம்முறை சீனாவின் பீஜிங் நகரில் நடக்க இருப்பது XXIXஆவது ஒலிம்பிக் போட்டியாகும். 1896 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஒலிம்பிக் போட்டிகள், இன்று உலக அளவில் மாபெரும் விளையாட்டு விழாவாக பரிணமித்துள்ளது.

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற ஒலிம்பிக் போட்டிகளை நெறிப்படுத்துவது சர்வதேச ஒலிம்பிக் குழுவேயாகும். மேற்படி, ஒலிம்பிக் குழுவின் முதலாவது கூட்டமானது, 1894 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி கூட்டப்பட்டதுடன் முதலாவது ஒலிம்பிக் போட்டி 1896 ஆம் ஆண்டு கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரில் நடத்தப்படல் வேண்டும் என்று அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.





## 1896 எதென்ஸ் (கிரேக்கம்)

ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெற்ற மேற்படி முதலாவது ஒலிம்பிக் போட்டிகளில் 14 நாடுகளைச் சேர்ந்த 243 விளையாட்டு வீரர்கள் 43 போட்டிகளில் கலந்து கொண்டிருந்தனர். அதிகமாக கிரேக்கம், ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களே கலந்து கொண்டனர். முதலாவது போட்டியை நடத்திய கிரேக்கத்தை மகிழ்ச்சி பொங்கச் செய்யும் விதமாக 'மரதன்' ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட கிரேக்கத்தைச் சேர்ந்த ஸ்பிரிடன் லூவிஸ் என்பவர் வெற்றியீட்டினார்.

உயரம் பாய்தல் போட்டியில் வெற்றியீட்டிய அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் கொன்லி என்பவரே உலகின் முதலாவது ஒலிம்பிக் வெற்றியாளர் என்ற பெருமையைப் பெற்றார். இதன்படி, முதலாவது இடத்தை பெற்ற போட்டியாளர்களுக்கு வெற்றிப் பதக்கமொன்று வழங்கப்பட்டதுடன் 'ஒலிவ்' கிளையினால் தயாரிக்கப்பட்ட வெற்றிக் கிரீடமும் சூட்டப்பட்டது.

## 1900 - பெரிஸ் (பிரான்ஸ்)

மே மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி வரை நடைபெற்ற மேற்படி போட்டிகளில் 87 விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றதுடன் பெண் போட்டியாளர்கள் முதல் தடவையாக கலந்து கொண்ட ஒலிம்பிக் போட்டியாகவும் இது அமைந்தது. இதற்கமைய, 1209 ஆண் போட்டியாளர்களும் 19 பெண் வீராங்கனைகளும் கலந்து கொண்டிருந்தனர். எனினும், இந்த ஒலிம்பிக் போட்டிகள் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஐந்து மாதங்களாக நடைபெற்ற இந்தப் போட்டிகளில் கலந்து கொண்ட போட்டியாளர்கள் தாம் கலந்து கொள்வது ஒலிம்பிக் போட்டிகளில்தான் என்பதை சரிவர அறிந்திருக்காதளவிற்கு போட்டி ஏற்பாடுகள் பலவீனமாக காணப்பட்டதாம்.

## 1904-சென்ட் லுவி (ஐக்கிய அமெரிக்கா)

ஐக்கிய அமெரிக்காவின் 'சிக்காகோ' நகரில் நடத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அப்போதைய அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த தியடோர் ருஸ்வேர்ல்ட்டின் ஆர்வத்தின் காரணமாக சென்லுவீயில் மேற்படி போட்டிகள் நடைபெற்றன. ஆயினும், போட்டி ஏற்பாடுகள் சரிவர நடைபெறாததன் காரணமாக ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்தனர். நான்கு மாதங்களுக்கும் மேலாக நடைபெற்ற மேற்படி ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க போட்டியாளர்கள் மட்டுமே கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## 1906-எதென்ஸ் (கிரேக்கம்)
### (உத்தியோகபூர்வமற்ற ஒலிம்பிக் போட்டிகள்)

முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் வெற்றிகரமாக அமைந்தமையால் நான்கு வருடங்களுக்கு ஒருதடவை ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நான்கு வருட காலத்தின் நடுப்பகுதியில் தாமே நடத்துகின்ற உத்தியோகப்பற்றற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் இந்தப் போட்டிகள் பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களின் காரணமாக கைவிடப்பட்டது. ஆனால், அடுத்தடுத்து இரண்டு தடவைகள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் இடையூறுகள் ஏற்பட்டதால் கடினமான முயற்சியின் பின்னர் 1906 ஆம் ஆண்டில் இந்த போட்டிகள் நடத்தப்பட்டன.இதனை ஓர் 'உத்தியோகப்பற்றற்ற ஒலிம்பிக் போட்டி' என்று சர்வதேச ஒலிம்பிக் குழு பிரகடனம் செய்தது.



## 1908-லண்டன் (பிரிட்டன்)

இந்த ஒலிம்பிக் போட்டிகள் இத்தாலியின் ரோம் நகரில் நடத்தப்படவிருந்த போதிலும் 1906 ஆம் ஆண்டில் 'விசுவியஸ்' எரிமலை வெடித்ததன் காரணமாக, அப்போட்டிகளை லண்டனில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டனின் VII ஆவது எட்வர்ட் அரசரினால் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 2008 வீர, வீராங்கனைகள் தத்தமது நாடுகளின் சார்பாக போட்டியின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டனர். ஹொக்கி போட்டிகளும் முதல் தடவையாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்த ஒலிம்பிக் போட்டிகளில் 42 கி.மீற்றர் தூர மரதன் ஓட்டப்போட்டியில் இத்தாலியைச் சேர்ந்த டொரண்டோ பீட்ரி என்பவர் வெற்றிப் பெருமிதத்துடன் போட்டியை முடிவு செய்யும் நிலையில், அரங்கினுள் வந்து சேர்ந்து கொண்டிருக்கையில் ஐந்து தடவைகளுக்கு மேல் நிலை தவறி கீழே விழுந்தார். இதனால், அவரால் வெற்றிக் கம்பத்தைத் தொட முடியாமல் போனது. இவரை உதவியாளர்கள் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இதனால், அவருக்கு வெற்றி வாய்ப்பு வழங்கப்படவில்லை.



## 1912-ஸ்டொக்ஹோம் (சுவீடன்)

எதிர்கால நவீன ஒலிம்பிக் போட்டிகளின் திருப்புமுனை மேற்படி போட்டிகளில்தான் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது. இதன்படி, நவீன வகையான போட்டிகள் இப்போட்டிகளில்தான் அறிமுகப்படுத்தப்பட்டன. அவ்வாறே மெய்வல்லுனர் போட்டிகளில் நவீன 'இலக்ட்ரோனிக்' நேரக்கணிப்பில் போட்டிகளை நடத்தும் முறை உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆயினும், குத்துச்சண்டைப் போட்டிகளை தனது நாட்டில் நடத்துவதற்கு சுவீடன் அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக, இனிவரும் காலங்களில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துகின்ற நாடுகள் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கு அமைய போட்டிகளை நடத்துவதற்கு அனுமதி மறுப்பது தொடர்பான அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒலிம்பிக் குழு தீர்மானித்தது. அதே வேளை, இந்தப் போட்டிகளில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் 320 கி.மீற்றர் தூரம் வரை நடைபெற்றன.

(இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பாதுகாப்புக்காக!

தாய்நாட்டின் விலைமதிப்பு மிக்க-உயிருள்ள சொத்தாக மதிக்கப் படுகின்ற-எதிர்கால சந்ததியினரான உங்கள் கவனத்திற்காகவும் உங்க ளதும் நாட்டினதும் பாதுகாப்பு நலன் கருதியுமே இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம். நீங்கள் அனை வரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய காலகட்டம்தான் இது. எப்போதும் எச்சரிக்கையுடனும் உங்களைச் சுற்றி என்ன நடக்கின் றது என்பது பற்றியும் நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும்.



## விழிப்புணர்வுடன் இருங்கள்

குண்டுவெடிப்பு போன்ற சம்பவங்களி லிருந்து தற்காத்துக் கொள்வதற்கு நீங்கள் சனநெருக்கடியுள்ள இடங்களில் அதிக நேரம் இருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், மக்கள் கூட்டம் அதிகமுள்ள இடங்களில் விபத்துக்கள் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். மேலும், கீழே விழுந்து கிடக்கும் விளையாட்டுப் பொருட்கள், புத்தகங்கள், ஏனைய கண்கவர் பொருட்களில் கூட வெடிபொருட்கள் பொருத்தப்பட்டிருக்க லாம். உங்களுக்குச் சொந்தமில்லாத எந்தவொரு பொருளையும் கையாள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சந்தேகத்திற் கிடமான பொதிகள், பொருட்கள் ஏதாவதொன்றைக் கண்டால் உடனே அரு கிலுள்ள பெரியவர்களிடம் அது பற்றிக் குறிப்பிடுங்கள்.

பஸ், புகைவண்டி அல்லது நடைபயண மாகவேனும் பாடசாலை மற்றும் வெளிப் பயணங்கள் செல்லும்போது சந்தேகத்திற் கிட மான பொருட்கள் அல்லது நபர்களைக் கண்டால் மேற்சொன்ன விடயங்களைக் கருத்தில் கொண்டு செயல்பட சற்றும் தயங்க வேண் டாம். பயணிக்கும்போது தூக்கம் வந்தால் உங்கள் கையிலுள்ள புத்தகப் பை அல்லது பொதி மூடப்பட்டிருக்கின்றதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். சனநெருக்கம் அதிகமுள்ள பொது வாகனங்களில் பய ணிக்கும்போது உங்களுக்கு உதவும் நோக் கில் எவரேனும் உங்கள் பாடசாலைப் பையை அல்லது பொருட்களை வைத்துக் கொண்டால் அவர்களுக்கு அருகிலேயே நீங்களும் இருங்கள். அவ்வாறே, உங்களுக்கு அறிமுகமில்லாத எவரும் உங்களை அழைத்து ஒரு பொதியை அல்லது வேறு ஏதும் பொருட்களைக் கொடுத்து அதனை குறித்த ஓர் இடத்தில் வைத்து விட்டு வரச் சொன்னால் அவற்றை வாங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அவர்களை விட்டும் விலகி விடுங்கள்.



## நீங்கள் செய்ய வேண்டியது

நீங்கள் போகும் வழியிலோ இருக்கும் இடத் திலோ சந்தேகத்திற்கிடமான பொருட்கள் அல்லது பொதிகளைக் கண்டால் அது என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்க்கவோ அத னைத் திறந்து பார்க்கவோ முற்படாதீர்கள்.

அவசர நிலைமைகளின் போது தொடர்பு கொள்ளக் கூடிய முக்கியமான தொலைபேசி இலக்கங் களை எப்போதும் உங்களு டன் வைத்திருங்கள்.



அடையாள அட்டை, உங்களை அடையாளம் காட்டக் கூடிய பொலிஸ் அறிக்கை அல்லது வேறு ஏதும் பத்திரங்களை நீங்கள் வெளி யில் செல்லும் போது எடுத்துச்செல்ல மறவாதீர்கள்.

## அவசர நிலைமைகளின் போது....

அவசர நிலைமைகளின் போது உடனே செயற்பட்டு அதனைக் கட்டுப்படுத்துவதில் அல்லது உதவுவதில் நீங்களும் பங்காளர் களாகலாம். அவசர நிலைமை எனும்போது அது வொரு குண்டு வெடிப்பு, சூறாவளி, சுனாமி, தீப்பிடிப்பு, வெள்ளப்பெருக்கு போன்ற எந்தவொரு அனர்த்த நிலைமையாகவும் இருக்கலாம்.

## இதன் போது...

* குழப்பமடைய வேண்டாம்.
* விபத்தைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
* ஏனையவர்களின் அறிவுரைகள்,கருத்துக்களை உள்வாங்கி அதன்படி செயற்படுங்கள்.
* வதந்திகள் பரவுவதை இயன்றளவில் தடுங்கள்.
* குறித்த சம்பவங்கள் தொடர்பில் சம்பந்தப் பட்டவர்களுக்கு (பாதுகாப்பு நிலையங்கள், வைத்தியசாலை, தீயணைப்புப் பிரிவு) தெரியப் படுத்துங்கள்.
* சம்பவ இடத்திலுள்ள சிறுவர்கள், முதியவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு உடன் அழைத்துச் செல்லுங்கள்.
* பாதிக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் அறிந்த முதலுதவிகளை வழங்குங்கள்.

## பெரியோரின் கவனத்திற்கு....!

நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்புக் குறித்து நாம் அனைவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். அவ்வாறே, உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து கூடிய அக்கறை காட்ட வேண்டும்.

* பாதுகாப்பு செயற்பாடுகள் குறித்து எப்போதும் உங்கள் பிள்ளைகளைத் தெளிவுபடுத்துங்கள். அறிவுரைகளை வழங்குங்கள்.
* நேரகாலத்துடன் அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்.
* பாடசாலை விட்டதும் வெளி இடங்களில் நேரத்தை வீணடிக்காது உடனே வீட்டுக்குத் திரும்பி வரும்படியும் தேவையின்றி பாடசாலையை விட்டு வெளியேறாதிருக்கும்படியும் அறிவுறுத் துங்கள்.
* அறிமுகமில்லாதவர்களுடன் கதைத்தல், நட்புறவைப் பேணல், பொருட்களை வாங்குதல் ஆகியவற்றை தவிர்க்கும்படி அவர்களை எச்சரியுங்கள்.
* பாடசாலை விட்டு வீடு வந்ததும் அவர்களின் பாடசாலைப் பைகளை சோதனையிடுங்கள்.

## பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் கவனத்திற்கு.....!

* பாதுகாப்புக் குழுவொன்றை நியமித்தல் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,மாண வர்கள்,பெற்றோர், ஏனைய பாடசாலை ஊழி யர்கள் ஆகியோரை உள்ளடக்கிய பாதுகாப்புக்




குழுவொன்றை நியமித்து அதனூடாக பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களை தெளிவு படுத்தல். பாதுகாப்பு நிலவரம் குறித்து பாது காப்பு அதிகாரிகளின் உதவிகளை நாடல். அவர்களிடமிருந்து பாதுகாப்பு தொடர்பில் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளல்.
* பாதுகாப்புக் குழுவுடன் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத் தல்.
* பாடசாலைகளுக்குள்ளும் அதன் சுற்றுவட்டத்திலும் பாதுகாப்பினைப் பலப் படுத்தல். அவதானிப்புடன் இருத்தல்.
* அவசர நிலைமைகளின் போது செயற்பட வேண்டிய முறைகள் பற்றி மாணவர்கள், பெற் றோர்கள், ஆசிரியர்களுக்கு செயல்முறைகளூ டாக தெளிவுபடுத்தல். உதாரணமாக, அவசர நிலைமைகளின்போது மணி அடித்தல், செயற் பட வேண்டிய முறைகள் தொடர்பாக செயற் பாட்டு ரீதியிலான முன் ஆயத்தங்களை மேற் கொள்ளல். விளக்கமளித்தல்.

## அவசர தொலைபேசி இலக்கங்கள்

பொலிஸ் தலைமையகம் - 2421111
பொலிஸ் அவசரப் பிரிவு - 2433333
இராணுவத் தலைமையகம் - 2432683
குண்டு செயலிழப்புப் பிரிவு - 2434251
விமானப்படைத் தலைமையகம் - 2441044
அவசர அழைப்பு - 119/116.

–ஜீநு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 162 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-173) |
|---|---|---|---|---|
| ஆர்.கோபிகன், தரம் - 3B, வவுனிக்குளம் அ.த.க.பா., மல்லாவி. | ஆர்.தனுக்ஷா, தரம் - 8, ஹைலண்ட்ஸ் ம.கல்., ஹட்டன். | எம்.அர்ஹாம், தரம் - 9B(T), சென் மேரிஸ் மு.ம.வித்., நாவலப்பிட்டி. | எஃப்.பஜீலா, தரம் - 6B, பாபுல் ஹசன் ம.ம.வித்., ஹொரகொல்ல. | எஃப்.ஸப்ரா, தரம் - 7(T), முஸ்லிம் மகளிர் கல்., காலி. |

### 2 எத்தனை பருந்துகள் உள்ளன?

* மறைந்திருக்கும் முகத்தை இனங்காண்க



### 3 (A) மரபுத்தொடர் உணர்த்தி நிற்கும் கருத்தின் கீழ்க் கோடிடுக

1) அரைப் படிப்பு
- a. நிரம்பிய கல்வி
- b. அரைவாசிப் படிப்பு
- c. நிரம்பாக் கல்வி

2) உச்சி குளிர்தல்
- a. தலையில் குளிர்ச்சி
- b. குளித்தல்
- c. மிகவும் மகிழ்தல்

3) கண் வளர்தல்
- a. நித்திரை செய்தல்
- b. விழித்தல்
- c. கண்ணைப் பெரிதாக்கல்

4) நாக்குப் புரளுதல்
- a. உமிழ்நீர் சுரத்தல்
- b. சொல் மாறுதல்
- c. உண்மை பேசல்


5) கையைக் கடித்தல்
- a. கை விடல்
- b. தானம் வழங்கல்
- c. நட்டமடைதல்

### (B) விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக

1) மாலுமி - ..............................
2) கொல்லன் - ..............................
3) குயவர் - ..............................
4) வழக்கறிஞர் - ..............................
5) கணக்காய்வாளர் - ..............................

(potter/auditor/navigator/advocate/blacksmith)

### 4 (A) சதுரங்கள் எத்தனை?



### (B) தரவுகளை வாசித்து விடையளிக்க

* வகுப்பறையொன்றில் மொத்தம் 40 மாணவர்கள் உள்ளனர்.
* இவர்களில் பரீட்சைகளில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்கள் முறையே; கமலா, தேவகி, ரஞ்சன், யதுர்ஷன், சோபனா. நான்காம் இடத்தைப் பெற்ற யதுர்ஷன் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகள் 529 ஆகும்.
* முதலாம் இடத்தைப் பெற்றவர் ரஞ்சனிலும் பார்க்க 45 புள்ளிகளைக் கூடுதலாகப் பெற்றுள்ளார்.
* தேவகி பெற்ற புள்ளிகள் 583 ஆகும். தேவகியிலும் பார்க்க ரஞ்சன் 36 புள்ளிகளைக் குறைவாகப் பெற்றுள்ளார். யதுர்ஷனிலும் பார்க்க ரஞ்சன் 18 புள்ளிகளைக் கூடுதலாகப் பெற்றுள்ளார்.

a) ஐவரும் பெற்ற புள்ளிகளை எழுதுக.
..............................
b) கமலா பெற்ற புள்ளிகள் எத்தனை?
..............................
c) ரஞ்சன் பெற்ற புள்ளிகள் எத்தனை?
..............................
d) ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர் யார்?
..............................




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.07.23 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 165**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### 1 ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக





## அறிவுக்கு விருந்து - 162 விடைகள்

**போட்டி: 02**

1 - nail
2 - owl
3 - bittergourd
4 - scale
5 - stethoscope
6 - ladder

**போட்டி: 03**


1) மந்தை
2) சேவல்-பேடு
3) அஸ்தமனம்
4) தேர்ப்படை-யானைப்படை-குதிரைப்படை-காலாட்படை
5) குயவன்
6) காடும் காடு சார்ந்த இடமும்

**போட்டி: 04**

(A)
1. II, XVIII, LVI, CII, CXXXIV
2. V, XXV, CXC, DIV, MXIII
3. V, XV, XLV, CLXXV, MV
4. IV, XVII, XX, L, XCII

(B)
1. 70 மீற்றர்
2. 112 கம்புகள்

### 5 குறுக்கெழுத்துப் போட்டி இல.176



**மேலிருந்து கீழ்**

01. இத்தனை ஆண்டுகள் நிறைவிலேயே பொன்விழா கொண்டாடப்படுகின்றது.
02. உலகின் அனைத்து விலங்குகளிலிருந்தும் மேலதிகமாக மனிதன் பெற்றிருப்பது.
03. தாயின் தங்கை.
04. குற்றவாளிகளை அடையாளம் காணப் பயன்படுவது.
08. முத்து இதனுள் விளையும்.
09. பிரஜை/மக்கள் என்றும் அர்த்தப்படும்.

**இடமிருந்து வலம்**

01. தமிழ் மாதங்களில் ஒன்று.
05. ஒருவர் தனக்கு சொந்தமானதை (பொதுவாக வாகனம், காணி, கட்டடங்கள்) அனுபவிக்கும் உரிமையை வேறொருவருக்குக் கொடுத்து கால அடிப்படையில் வசூலிப்பதைக் குறிக்கும் சொல்.
06. துணி நெய்யப் பயன்படும் மூலப்பொருளொன்று.
07. மூக்கு-ஒத்தகருத்துச் சொல்.
09. இலக்கு-ஒத்தகருத்துச் சொல்.
10. கூட்டமொன்றிலோ அல்லது புத்தகத்திலோ இறுதியாக வழங்கும் பேச்சு/உரை.

**குறுக்கெழுத்துப்போட்டி 173 விடைகள்**

**மேலிருந்து கீழ்**

01. மரகதம்
02. யுவன்
03. தச்சன்
05. விடை
08. ஏழ்மை
09. கூலி
10. பாலை

**இடமிருந்து வலம்**

01. மல்யுத்தம்
04. கவின்
06. சனி
07. தடை
08. ஏன்
09. கூழ்
11. வலிமை

**குறுக்கெழுத்துப் போட்டி -176**
**"விஜய்" த.பெ.எண். 2037 கொழும்பு**

### பாராட்டுப் பெறுவோர்

வி.திருச்செல்வம், தரம் - 6A, அல்-மக்கியா மு.ம.வித்., இரத்தினபுரி.

எம்.முர்ஷித், தரம் - 9A, அல்-அஸ்ஹர் ம.கல்., திஹாரி.

பி.தாரணி, கோவில் வீதி, குருமன்காடு.

### அன்பு மாணவர்களே!

**இது உங்கள் கவனத்திற்கு.....**

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி



உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி 'விக்டோரியா' நீர்வீழ்ச்சி என்பது நாம் அறிந்ததே.

இந்த நீர்வீழ்ச்சி தென் ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. சாதாரண நீர்வீழ்ச்சிகளோடு ஒப்பிடுகையில் இது மிகவும் [illegible]தியாசமான தோற்றத்தைக் கொண்டது.

சாதாரண நீர்வீழ்ச்சிகளை தூரத்தில் இருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால், இந்த நீர்வீழ்ச்சியை நீர் விழ ஆரம்பிக்கும் உச்சியிலிருந்தே பார்த்து மகிழலாம்.

நீர்விழும் எல்லைவரை நீந்திச் சென்று நீர் விழுவதை எட்டிப் பார்க்கும் வகையில் இந்த நீர்வீழ்ச்சி அமைந்திருப்பது இதன் விசேட தன்மையாகும்.


## 50 ஆவது [illegible]றந்தநாளை கொண்டாடிய பிரெஸ்டா



பிரெஸ்டா என்னும் இந்த நீர் யானை கடந்த ஜூன் 30 ஆம் திகதியன்று தனது 50 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியபோது அதற்கு வழங்கப்பட்ட பிறந்தநாள் பரிசுகளை பார்வையிட்டதையே படத்தில் காண்கிறீர்கள். 2000 கிலோகிராம் எடையுள்ள இந்த நீர் யானை உக்ரெய்னின் 'கீவ்ஸ்' மிருகக்காட்சிச் சாலையில் இருக்கிறது.

## வரலாற்றிலிருந்து..

# கொழும்பு மீது தாக்குதல்



**1.** முதலியார் கொழும்பு நகரை காட்டிக் கொடுப்பதற்கு காத்திருந்தார். எனினும், இளவரசர்கள் வரவில்லை. அவர்கள் போர்க்களத்தில் மூன்று நாட்களைக் கழித்தனர். பின்னர் கைது செய்தவர்களை கண்டிக்கு அனுப்பினர். அதன்பின் அவர்கள் சப்ரகமுவைக்குச் சென்றனர். அந்தப் பயணத்திற்கு பத்து நாட்கள் எடுத்தன. அந்நாட்களில் சிங்களப் படையினர் நாட்கள் செல்லச் செல்ல பிரபல்யம் அடைந்தனர். மேலும், மூன்று வாரங்கள் கழிந்தன. அதன்பின் கொழும்புக் கோட்டையை தாக்க ஆயத்தமாயினர்.

**2.** இளவரசர்களின் தாமதம் அதிகரித்தது. அச்சந்தர்ப்பத்தில் கோவாவிலிருந்து செய்தி ஒன்று வந்தது. அது லேன் கெரொட் செயிக்ஸாஸ் என்பவர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பதற்கான கட்டளையாகும். பதவி கிடைத்ததும் அவன் செயலில் இறங்கினான். மனுவேல் முதலியையும் அவனது குழுவையும் பிடித்து சிறையில் இட்டான்.



**3.** பின்னர் மல்வானையிலும் களுத்துறையிலும் இருந்த படை அணிகளை கொழும்புக்குக் கொண்டு வரச் செய்தான். கொழும்பின் பாதுகாப்பை அதிகரித்தான். இதனால், மன்னன் செனரத் கலவரமடைந்துஅறிக்கை ஒன்றை வெளியிட்டான். அதன்படி கொழும்பு நகரை அழித்தால் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியை தருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது ஐந்தாக பிரிக்கப்பட்ட நான்கு பகுதியாகும். அதற்கு மக்கள் விருப்பம் தெரிவித்தனர். நான்கு திசைகளிலும் இருந்து கொழும்புக்கு வந்தனர்.

**4.** அது பெருந்தொகையான மக்கள் கூட்டமாகும். அவர்கள் கொழும்பை சுற்றி வளைத்தனர். அதனைச் சூழவுள்ள பிரதேசங்களையும் தம் வசப்படுத்தினர். பல முறை கோட்டையைத் தாக்கினர். ஆனால், பயனேதும் ஏற்படவில்லை. போர்த்துக்கேயப் படையினர் கோட்டையை பாதுகாப்பதில் வெற்றி கண்டனர். சிங்களவர்களும் பின் வாங்கவில்லை. தொடர்ந்து போராடினர். கொழும்பை கொள்ளையடிக்க முயற்சித்தனர். பல்வேறு உபாயங்களை கையாண்டனர். ஆனால், போர்த்துக்கேயர் கோட்டையைப் பாதுகாத்தனர். அவ்வாறு ஒரு மாதம் கழிந்தது. இந்தியாவில் இருந்து போர்த்துக்கேயருக்கு மேலதிக படை அணிகள் வந்தன.

**5.** மீண்டும் போர்த்துக்கேயர் பலம் அடைந்தனர். சுற்றி வளைத்து தாக்கினர். விரட்டி அடித்தனர். நவம்பர் 11 ஆம் திகதி நாக்கலகமவில் அரசனின் படையைச் சந்தித்தனர். யுத்தம் ஆரம்பித்தது. ஈற்றில் போர்த்துக்கேயர் வெற்றி பெற்றனர். சிங்களச் சேனை பின்வாங்கியது. கொழும்பு நகரம் பாதுகாக்கப்பட்டது. அதற்காக அரும்பெரும் தொண்டாற்றிய கொச்சின் நாட்டின் தளபதியாகிய டொன் பிலிப் மஸ்கரஞ்ஞாவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. கெப்டன் ஜெனரல் எனும் உயர் பதவி வழங்கப்பட்டது.



**6.** காலம் கடந்தது. கோவாவின் பிரதிநிதிக்கு புதிய ஜெனரல் குறித்து நல்லபிப்பிராயம் இருந்தது. அவர் அவனை அப்பதவியில் நிரந்தரமாக்கினார். இதற்கிடையில் மன்னன் செனரத் மீண்டும் கொழும்பை கைப்பற்றுவதற்கு சூழ்ச்சிகளை மேற்கொண்டார். அது 'லஸ்கிரிஞ்ஞா' படை அணியுடன்தான் திட்டமிடப்பட்டது. இச்சூழ்ச்சி குறித்து மாத்தறை ஏக்கநாயக்க முதலிக்கு தெரிய வந்தது. அவன் அச்சதித்திட்டத்தை வெளிப்படுத்தினான்.



எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

**7.** அம்முயற்சி கை நழுவிப் போனது. செனரத் மன்னன் கண்டிக்குச் சென்றான். மெனிக்கடவர படையை அடிபணிய வைத்தான். அவரின் இளைய மகன் இராஜசிங்கன் பியகம, கடுவெலை மற்றும் மல்வானை ஆகிய இடங்களைக் கைப்பற்றினான். அதன் பின் அவன் கொழும்பைத் தாக்க முயற்சிகளை மேற்கொண்டான். ஆனால், அது வெற்றி அளிக்கவில்லை.

**8.** அதன் பின் இளவரசன் இராஜசிங்கன் மட்டக்களப்பில் போர்த்துக்கேய கோட்டையைத் தாக்கினான். அதனைக் கைப்பற்ற முயற்சித்தான். அதுவும் தோல்வியில் முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் வாழும் ஆதிவாசிகள்



நாகரிகமடைந்துள்ள இந்தக் காலப்பகுதியிலும் ஆதிகாலத்தில் வாழ்ந்த வேடர்கள் போன்ற தோற்றங்களில் ஆதிவாசிகள் உலகின் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். ஓலைகளால் வேயப்பட்ட கூரைகளிலான 'மெலோகாஸ்' என்னும் குடிசைகளே அவர்களின் இல்லங்களாக இருக்கின்றன.

சமைப்பதற்கும் குளிரின் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இவர்கள் தீயை உண்டாக்கிக் கொள்கின்றனர்.







படங்களில் காணப்படும் சிறிய குடிசைகளை சமைப்பதற்கும் பெரிய குடிசைகளை உறங்குவதற்கும் இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

தென் அமெரிக்க வனங்களிலுள்ள இந்த ஆதிவாசிகளுக்கு வெளி உலகுடன் தொடர்புகள் கிடையாது. இங்கு காணப்படும் படங்களிலிருந்து இவர்களின் வாழ்க்கை முறை எப்படியிருக்கும் என்பதை நாம் ஓர் அளவுக்கு ஊகித்துக் கொள்ளலாம்.

இவர்களின் இந்த குடியிருப்புகளைச் சுற்றிலும் தோட்டங்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கான உணவை இவர்கள் இந்த தோட்டங்களில் உற்பத்தி செய்து கொள்கின்றனர்.

இவர்கள் பழங்களால் தயாரிக்கப்பட்ட ஒருவித சாயத்தை தம் உடலில் பூசிக் கொள்கின்றனர். சிவப்பாகக் காட்சியளிக்கும் இவர்கள் தம்மைப் புகைப்படம் எடுக்கும் விமானங்களை நோக்கி அம்புகளை எய்கின்றனர். சிவப்பாகக் காட்சியளிப்பவர்கள் ஆண்கள் என்றும் கறுப்பாகக் காட்சியளிப்பவர்கள் பெண்கள் என்றும் கருதப்படுகின்றது.



இப்படி வெளியுலகத் தொடர்புகள் இல்லாத சுமார் 100 ஆதிவாசி இனங்கள் உலகில் இருப்பதாகத் தெரிகிறது. இவர்களில் அரைவாசிப் பேர் பிரேஸிலில் அல்லது பெருவில் இருப்பதாகவும் தெரிகிறது.

'அமேசன்' காட்டுப்பகுதியில் வாழும் ஆதிவாசிகள் இங்கு காணப்படுகின்றனர். ஆதிவாசிகள் இன்னும் வாழ்கின்றனர் பதை உறுதிப்படுத்துவதற்காகவும் அவர்களையும் அவர்களின் வாழ்க்கை முறையையும் பாதுகாப்பதற்காகவும் பிரேஸில் அரசாங்கத்தால் இந்தப் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஜூலை மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 16, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org